திருக்கோயில்

ஜனவரி
2004

விலை
ரூ 7.00



மதுரை அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோயிலில் 26.12.2003 அன்று கருணை இல்லக் கட்டிடத் திறப்பு விழா மிகச் சிறப்பாக நடைபெற்றது. மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் டாக்டர் கா. காளிமுத்து அவர்கள் கருணை இல்லத் கட்டிடத் திறந்து வைத்தார்கள். மாண்புமிகு இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை அமைச்சர் திருமிகு பி.சி. இராமசாமி அவர்கள், அறநிலையத்துறையின் அரசுச் செயலாளர் திருமிகு பு.ஏ. இராமையா இ.ஆ.ப. அவர்கள், இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை ஆணையாளர் திருமிகு ஜி. இராமகிருஷ்ணன் இ.ஆ.ப. அவர்கள் இவ்விழாவில் பங்கேற்றுச் சிறப்பித்தார்கள். திருக்கோயில் இணை ஆணையாளர் / செயல் அலுவலர் திருமிகு பா. பாஸ்கரன் பி.எஸ்.சி., பி.எல் அவர்கள் விழா ஏற்பாடுகளைச் சிறப்புறச் செய்து இருந்தார்கள்.

திருக்கோயில்

திங்கள் இதழ்

தனி இதழ்	:	ரூ. 7.00
ஆண்டு உறுப்பினர் கட்டணம்	:	ரூ. 75.00
ஆயுள் உறுப்பினர் கட்டணம்	:	ரூ. 1000.00

மாலை		சுபானு - தை	மணி
46	திருவள்ளுவர் ஆண்டு 2035	ஜனவரி 2004	1

சிறப்பாசிரியர்

திருமிகு ஜி. இராமகிருஷ்ணன், இ.ஆ.ப.
ஆணையாளர்

ஆசிரியர்

முனைவர் த. அமிர்தலிங்கம், எம்.ஏ., பி.எச்.டி.

"திருக்கோயில்" நிர்வாகக் குழுவினர்

திருமிகு எஸ். கனகய்யா, பி.எஸ்.சி., பி.எல்.
கூடுதல் ஆணையாளர்

திருமிகு த. சுந்தரம், பி.ஏ., பி.எல்.
இணை ஆணையாளர், தலைமை இடம்

திருமிகு ஆ. குப்புசாமி, பி.ஏ. பி.எல்.
ஆணையாளரின் நேர்முக உதவியாளர்

திருமிகு கே.கே. இராஜா, எம்.ஏ., பி.எல்.
இணை ஆணையாளர் - செயல் அலுவலர்
அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி
திருக்கோயில், பழநி

<u>முகப்பு</u>

திருவரங்கம்
அருள்மிகு ஸ்ரீ நம்பெருமாள்
வைரமுடியுடன்

பொருளடக்கம்

வைணவத்தின் விடிவெள்ளி – இராமாநுஜர்
- திருமிகு பு.ஏ. இராமையா இ.ஆ.ப.
அரசுச் செயலாளர்

வைகுண்ட ஏகாதசி
- டாக்டர் த. அமிர்தலிங்கம்

தில்லைத் திருக்கோயில்
- பேராசிரியர் டாக்டர் ச. மெய்யப்பன்

பிரம்மாவிற்கு வேதம் உபதேசம் செய்த திருத்தலம் – திருநாராயணபுரம்
- திருக்கோயில் வெளியீடு

பதினெண் சித்தர்கள்
- பொறியாளர் ஜி. வெங்கடேசன், எம்.இ., எம்.ஐ.இ.,

தட்சிணா மூர்த்தி - கவிஞர் சொ. பொ. சொக்கலிங்கம்

திருத்தணிகை திருமுருகர் திருக்கவசம்
- கவிஞர் முருகுவண்ணன்

ஆரூர் திருக்கோயிலும் பதினெண் இசைக் கருவிகளும் - எம். விஜயரங்கதுரை

முற்பகல் செய்யின் பிற்கல் விளையும் (நீதிக்கதை)

பெண்ணுக்குள் ஞானத்தை வைத்தான்
- டாக்டர் செல்வகணபதி

உறுப்பினர் கட்டணம் அனுப்ப வேண்டிய முகவரி:
உயர்திரு ஆணையாளர் அவர்கள்
திருக்கோயில்
இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை
119, உத்தமர் காந்தி சாலை, சென்னை - 600 034.
தொலைபேசி: *28334811, 28334812, 28334813*

வைணவத்தின் விடிவெள்ளி - இராமாநுஜர்

- திருமிகு பு.ஏ. இராமையா, இ.ஆ.ப.,
அரசுச் செயலாளர், தமிழ் வளர்ச்சி, பண்பாடு
மற்றும் இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை

''காரேய் கருணை இராமாநுச! இக்கடல் இடத்தில்
ஆரே அறிபவர் நின்அருளின் தன்மை அல்லலுக்கு
நேரே உறைவிடம் நான் வந்துநீ என்னை உய்த்தபின் உன்
சீரே உயிர்க்குயிராய் அடியேற்கின்று தித்திக்குமே!''

''பொருந்திய தேசும் பொறையும் திறனும் புகழ் நல்ல
திருந்திய ஞானமும் செல்வமும் சேரும் செறுகலியான்
வருந்திய ஞாலத்தை வண்மையினால் வந்தெடுத்தளித்த
அருந்தவன் எங்கள் இராமாநுசனை அடைபவர்க்கே!''

என ''இராமாநுச நூற்றந்தாதி'' நூல் நம் வைணவத்தின் விடிவெள்ளியாம் இராமாநுசரைக் கொண்டாடிப் போற்றிப் புகழ்கின்றது.

''பல்கலையோர் தாம் மன்ன வந்த இராமாநுசன்''

என்று இராமாநுச நூற்றந்தாதி கொண்டாடுவது போல் இராமாநுசர் பலகலைகளையும் தம் வாழ் நாளில் ஐந்து ஆசாரியர்களிடம் கற்றுக் கொண்டவர் என்பது குறிப்பிடத்தக்க ஒன்று.

அறமிகு நற்பெரும்புதூரில் கேசவசோமயாஜி - பூமிதேவி தம்பதியருக்கு அருந்தவப் புதல்வராக கி.பி. 1017ஆம் ஆண்டில் சித்திரை மாதம் திருவாதிரை நட்சத்திரத்தில் திருஅவதாரம் புரிந்த நம் இராமாநுஜருக்குப் பெரிய நம்பிகள் (2) திருக் கோட்டியூர் நம்பிகள் (3) திருமாலை ஆண்டான் (4) பெரிய திருமலை நம்பிகள் (5) ஆழ்வார் திருவரங்கப் பெருமாள் அரையர் ஆகியோர் ஐந்து ஆசாரியர்கள் எனச் சிறப்பிக்கப்படுகின்றனர்.

முதல் குருவான பெரிய நம்பிகளிடம் திருமந்திரத்தையும், துவயத்தையும், சரமஸ்லோகத்தையும் அறிந்து கொண்டார். இரண்டாம் குருவான திருக் கோட்டியூர் நம்பிகளிடம் பதினெட்டு முறை நடந்து ஒரு மாதம் உண்ணா நோன்பிருந்து திருமந்திரம், துவயம், சரமஸ்லோகம் இவற்றின் பொருளினை உணர்ந்து கொண்டார்.

திருக்கோட்டியூர் நம்பிகள் ''ஓம்நமோ நாராயணாய'' எனும் திருமந்திரத்தின் ஆழ்பொருளை இராமாநுஜருக்கு விரித்துரைக்குமுன் ஒரு நிபந்தனை விதித்தார். 'தம் அனுமதியின்றி இத்திருமந்திரப் பொருளை யாருக்கும் கூறுதல் கூடாது; அவ்வாறு கூறின் நரகம் கிடைக்கும்' என்று இராமாநுஜரை எச்சரித்திருந்தார் அவர்.

திருமந்திரப் பொருளை உணர்ந்து கொண்ட இராமாநுஜர் இம்மந்திரப் பொருளை ஆசையுடைய பல்லோருக்கும் அறிவித்து அவர்கள் இறைவனடியை அடையச் செய்ய வேண்டும் என்று விரும்பினார்.

பல்லோரும் பயன்பெற இம்மந்திரத்தை உரைப்பதால் தமக்கு நரகமே கிட்டினும், கேட்டுய்ந்த பல்லோரும் பரகதி பெறுவர் என்று எண்ணிய இராமாநுஜர் திருக்கோட்டியூர் திருக்கோயில் விமானம் மீது ஏறி நின்று ''ஆசை உடையோரெல்லாம் வாருங்கள்; வாழ்வில் நலம் பயந்து பரமனடி சேர்ப்பிக்கும் மறைப் பொருளைக் கேட்டுப் பயன் அடைய வாருங்கள் வாருங்கள்!'' எனக் கூவி அழைத்து மந்திர உபதேசம் செய்த கருணையை என்னென்று வியப்பது! இத்தகைய இராமாநுஜரின் கருணை உள்ளத்தை வியந்தே ''காரேய் கருணை இராமாநுஜர்'' என்று வையம் அவரைப் புகழ்ந்து போற்றுகின்றது.

''என் கட்டளையை மீறி மந்திர உபதேசம் ஏன் செய்தனை?'' என்று இராமாநுஜரை மிகக் கடுமையாகக் கோபித்தார் திருக்கோட்டியூர் நம்பிகள்.

''சுவாமீ! தேவரீர் திருவடி சம்பந்தம் பெற்ற அடியேன் ஒருவன் நரகம் சென்றாலும், இத்தனை கோடி ஆத்மாக்கள் தேவரீர் திருவடி சம்பந்தத்தால் மோட்ச சாம்ராஜ்ய மாளிகைக்குச் செல்லும் வழியறிந்து பெரும் பயன் அடையும் பேறு பெறுகிறார்களே; அது நினைந்தே யான் மந்திர உபதேசம் செய்தேன், அடியேனை மன்னித்து அருளவேண்டும்'' என வேண்டிக் கொண்டார்.

இராமாநுஜரின் விளக்கம் கேட்டு ஒரு கணம் வியந்து, அயர்ந்து நின்ற திருக்கோட்டியூர் நம்பிகள் இத்தகைய பரந்த கருணை உள்ளம் தமக்கு இதுகாறும் இல்லாமல் போயிற்றே என்று வருந்தியதோடு நில் லாமல் ''எம்பெருமானைக் கருணைக் கடல் எனக் கூறக் கேட்டிருக்கிறோம். இன்று அக்கருணைக் கட லாகவே நாம் இராமாநுஜரைக் காண்கின்றோம். இனி கருணைக்கடலான இராமாநுஜரையும் ''எம் பெருமானார்'' என்றே சிறப்புப் பெயரிட்டு அழைப் போம். வைதிக சித்தாந்தமாக இதுவரை இருந்து வந்த விசிஷ்டாத்வைத சித்தாந்த வைணவமும் இனி ''எம்பெருமானார் தரிசனம்'' எனச் சிறப்புப் பெயர் பெறும்'' எனக் கூறி ஆசி கூறி அகம்பூரித்தார்.

''ஓரான் வழியாய் உபதேசித்தார் முன்னோர்
ஏரார் எதிராசர் இன்னருளால் - பாருலகில்
ஆசையுடை யோர்க்கெல்லாம் ஆரியர்காள் கூறும்
என்று
பேசி வரம்பறுத்தார் பின்''

என்று மணவாள மாமுனிகளும் இவ்வைபவத்தைப் போற்றிப் புகழ்ந்திருக்கக் காண்கின்றோம்.

மேலும் இராமாநுஜர் திருவரங்கப் பெருமாள் அரையரை மூன்றாவது குருவாகக் கொண்டு அவரிடம் திருவாய் மொழியையும் அதன் சாரமான பொருளை யும் தெளிந்துகொண்டார். திருமாலை ஆண்டானைத் தம் நான்காவது குருவாகக் கொண்டு அவரிடம் நாலாயிரத் திவ்விய பிரபந்தங்களையும் அவற்றின் பொருளையும் தெளிந்து கொண்டார். திருமலை நம்பி களை ஐந்தாவது குருவாகப் பெற்று அவரிடம் ஸ்ரீராமாயணம் உணர்ந்துகொண்டார்.

இவ்வாறு தம் வாழ்நாள் முழுதும் பல கலை களைக் கற்று உணர்ந்து அவற்றைப் பல்லோரும் அறிந்து பயன்பெறச் செய்தவர் நம் இராமாநுஜர் என்பதாலேயே ''இராமாநுச நூற்றந்தாதி'' அருளிச் செய்த திருவரங்கத்து அமுதனார்

''பூமன்னு மாது பொருந்திய மார்பன் புகழ்மலிந்த
பாமன்னு மாறன்அடி பணிந்துய்ந்தவன் பல்கலையோர்
தாம் மன்னவந்த இராமாநுசன் சரணாரவிந்தம்
நாம்மன்னிவாழ நெஞ்சே சொல்லுவோம் அவன்
நாமங்களே''

என்று முதற்பாடலிலேயே போற்றி அவர்தம் கலைய றிவைச் சிறப்பித்திருக்கக் காணுகின்றோம்.

பன்னிரு ஆழ்வார்கள் அருளிச் செய்த நாலாயிரத் திவ்விய பிரபந்தமென்னும் அமுதைத் தம் திருமுடி மேற் கொண்டு போற்றிய கலைவல்லார் நம் இராமா நுசப் பெருந்தகை.

இச்சிறப்பை எல்லாம் விதந்தோதும் வகையில் ''இராமாநுச நூற்றந்தாதி''யில் பற்பல பாடல்களைத் திருவரங்கத்து அமுதனார் பாடிச் சிறப்பித்துள்ளார்.

''வருத்தும் புறஇருள் மாற்ற எம்பொய்கைப்பிரான் மறையின்
குருத்தின பொருளையும் செந்தமிழ் தன்னையும் கூட்டிஒன்ற
திரித்தன் றெரித்த திருவிளக்கைத் திருவுள்ளத்தே
இருத்தும் பரமன் இராமாநுசன்''

''பூதத் திருவடி தாள்கள் நெஞ்சத் துறைய வைத்தானாம் இராமாநுசன்''

''தமிழ்த் தலைவன் பொன்னடி போற்றும் இராமா நுசன்''

''பான்பெருமாள் சரணமாம் பதுமத் தாரியல் சென்னி இராமாநுசன்''

''மழிசைக் கிறைவன் இணையடிப் போது அடங்கும் இதயத்து இராமாநுசன்''

''கொல்லிகாவலன் சொல் பதிக்கும் கலைக் கவி பாடும்
பெரியவர் பாதங்களே துதிக்கும் இராமாநுசன்''

''பல்லாண் டென்று காப்பிடும் பான்மையன்தாள்
பேராத உள்ளத்து இராமாநுசன்''

''சூடிக் கொடுத்தவள் தொல்லருளால்
வாழ்கின்ற வள்ளல் இராமாநுசன்''

''நீலன் தனக்கு உலகில் இனியான் எங்கள் இராமாநுசன்''

''சடகோபனைச் சிந்தையுற்றே பெய்தற்கு இசையும் இராமாநுசன்''

என்றெல்லாம் நாலாயிரத் திவ்விய பிரபந்தக் கலை யாவும் கற்றுணர்ந்த கலைவள்ளல் இராமாநுசர் என்பதை 'இராமாநுச நூற்றந்தாதி' போற்றிப் புகழக் காணலாம்.

இராமாயணம் கற்றுணர்ந்த இராமாநுசப் பெருமான் பெருமையையும்

''படிகொண்ட கீர்த்தி இராமாயணம் என்னும் பத்தி வெள்ளம்
குடிகொண்ட கோயில் இராமாநுசன்''

என்று போற்றுகின்றார் திருவரங்கத்து அமுதனார்.

இராமாநுஜருக்குத் ''திருப்பாவை ஜீயர்'' எனவும் ஒரு திருப்பெயர் உண்டு. திருவரங்கர் திருக்கோயில் நிர்வாகப் பொறுப்பை ஆளவந்தார் தம் திருவிருப்பின் பேரில் ஏற்றுக் கொண்டு திருவரங்கர் செல்வம் முற்றும் திருத்தி அமைத்த பெருமை நம் இராமாநுஜருக்கே உரியது.

திருவரங்கர் திருக்கோயில் நிர்வாகத்தை ஏற்று திருக்கோயில் வழிபாட்டில் நாலாயிர திவ்விய பிரபந்தங்களுக்கு உரிய இடம் வழங்கச் செய்தது மட்டும் அல்லாமல் வீதி செப்பனிடுவார். காவேரிக் கரை காப்போர், சுற்றுக் கோயில் சீரமைப்போர், மண்பானை வனைபவர், மரத் தச்சர், கல்தச்சர், ஓவியர், தையல் காரர், இசைவல்லோர், நாட்டியக்காரர் போன்ற பல்லோருக்கும் உரிய ஏற்றம் அளித்து செயல் நன்றாகத் திருத்திப் பணி கொண்டு திருக்கோயில் வருவாயைப் பெருக்கி அதனைச் சீராகப் பராமரித்த இராமாநுஜர் திருத்தொண்டின் அருமை உணர்ந்தே

''திருவரங்கன் செல்வமுற்றும்
திருத்திவைத்தான் வாழியே!''

என்று வைணவ உலகம் நம் இராமாநுஜரைப் போற்றிக் கொண்டாடி மகிழ்கின்றது.

இவ்வாறு அரங்கர் செல்வத்திற்கு அதிகாரி ஆக இருந்தபோதும் இராமாநுஜர் தாம் ஏற்றிருந்த துறவு வாழ்க்கைக்கு ஏற்ப தினமும் ஏழு இல்லங்களில் உணவு பெற்று உண்டு வருவதை வழக்கமாகக் கொண்டு இருந்தார். அவ்வாறு உணவு பெறச் செல்லும்போது ''திருப்பாவை''யைப் பாடிக் கொண்டே செல்லுவது இவர்தம் வழக்கம் ஆகும்.

''உந்துமதக் களிற்றன் ஓடாத தோள்வலியன்
நந்தகோபாலன் மருமகளே! நம்பின்னாய்!
கந்தம்கமழும் குழலி கடைதிறவாய்
வந்தெங்கும் கோழி அழைத்தன காண் மாதவிப்
பந்தல்மேல் பல்கால் குயிலினங்கள் கூவினகாண்
பந்தார்விரலி உன்மைத்துனன் பேர்பாட
செந்தாமரைக் கையால் சீரார் வளைஒலிப்ப
வந்து திறப்பாய் மகிழ்ந்தேலோர் எம்பாவாய்''

என இவர் பாடிச் செல்லவும், இவர் குருவான பெரிய நம்பிகளின் மாளிகைக் கதவைத் திறந்து கொண்டு அவர் மகள் அத்துழாய் கதவைத் திறந்து கொண்டு உணவிட வரவும் சரியாக இருந்தது.

தம் குருவின் மகளை, குருவின் மகளாக எண்ணாமல் நப்பின்னையாகவே எண்ணி விழுந்து இராமாநுசர் வணங்க, அத்துழாய் திகைத்துப் போய் தம் தந்தையிடம் சென்று, இராமாநுஜர் தம்மை விழுந்து வணங்கியதைத் தெரிவித்தனள். ''உன்னை நம்பின்னையாக எண்ணி வழிபட்டுள்ளார் இராமாநுஜர்'' என்று விளக்கம் தெரிவித்து இராமாநுஜருக்குள்ள திருப்பாவை ஈடுபாட்டினை உலகறியச் செய்தார் பெரிய நம்பிகள். இதுகொண்டு இராமாநுஜரைத் ''திருப்பாவை ஜீயர்'' என்றே இவ்வையம் போற்றிப் புகழ்ந்து வருகின்றது.

இராமாநுஜரை ஆயிரம் நா கொண்ட ஆதிசேடனின் அவதாரம் என்றே வைணவ உலகம் கொண்டாடிப் பூரிக்கும். இவருடன் சமயப் போர் புரிந்த பலசமயச் சான்றோர்களும் இவர்தம் அறிவாற்றலுக்கு ஈடுகொடுக்க இயலாமல் தோற்றுள்ளனர்.

இராமாநுசர் தம் வாதத் திறமையைப் போற்றி

''பண்தரு மாறன் பசுந்தமிழ் ஆனந்தம் பாய்மதமாய்
விண்டிட எங்கள் இராமாநுச முனி வேழம் மெய்ம்மை
கொண்டநல் வேதக் கொழுந் தண்டம் ஏந்திக்
குவலயத்தே
மண்டி வந்தே நின்றது வாதியர்காள் நுங்கள்
வாழ்வற்றதே''

என்று ''இராமாநுச நூற்றந்தாதி'' போற்றிப் புகழ்ந்திடக் காணுகின்றோம்.

''யக்ஞமூர்த்தி'' என்பவருடன் இவர் 18 நாட்கள் தொடர்ந்து வாதப்போர் புரிந்து அவரை வெற்றி கொண்டு தம் சீடர் ஆக்கி அவருக்கு ''அருளாளப் பெருமாள் எம்பெருமானார்'' என்று பெயர் சூட்டி ஆட்கொண்ட அருமையை என்னென்பது?

தமக்கு இளமையில் கல்வி கற்பித்த யாதவப் பிரகாசர் வேத வாக்கியங்களுக்குப் பொருந்தாத பொருள் கற்பித்தபோது அதை மறுத்துத் தெளிவு படுத்திக் குருவை மிஞ்சிய சீடராகத் திகழ்ந்த பெருமையும் நம் இராமாநுஜருக்கே உண்டு. தம் எண்பதாவது வயதில் யாதவப் பிரகாசர், இராமாநுஜரைத் தேடி வந்து தம்மைக் குருவாக ஏற்றருள வேண்டும் என வேண்ட அவரைச் சீடராக ஏற்று ''கோவிந்த ஜீயர்'' எனும் சிறப்புப் பெயரையும் தந்து ஆட்கொண்ட அருளாளர் நம் இராமாநுஜர் என்பது குறிப்பிடத்தக்க வரலாறாகும்.

வடமதுரை, சாலிக்கிராமம், துவாரகை, பத்ரிகாச்ரமம், நைமிசாரண்யம், கோகுலம், கோவர்த்தனம், பிருந்தாவனம், காஷ்மீரம் முதலான வடநாட்டுத் திருத்தலங்கள் பலவற்றிற்கும் சென்று புறசமயவாதிகளை வென்று திருமால் நெறியைப் பரப்பியுள்ளார் நம் இராமாநுஜர்.

ஸ்ரீநகரில் சாரதாபீடம் எனும் பட்டி மண்டபத்தில் இவர் பங்கேற்று வாதாடிய அருமை கண்டு சரசுவதி தேவியே இவருக்குக் காட்சி தந்தார் என்பது ஒரு அற்புத நிகழ்வாகும். இராமாநுஜரின் ஸ்ரீபாஷ்யச் சுவடியை சரசுவதி தேவி தம் தலைமேல் கொண்டு போற்றி இவருக்கு ''ஸ்ரீ பாஷ்யக்காரர்'' எனப் பட்டம் சூட்டிப் பரிசளித்துள்ளார் என்பது கொண்டும் இராமாநுஜர்தம் கல்வியறிவை நாம் கொண்டாடி மகிழக் கடமைப்பட்டுள்ளோம்.

''ஆரெனக்கின்று நிகர் சொல்லில் மாயன்அன்று
ஐவர் தெய்வத்
தேரினிற் செப்பிய கீதையின் செம்மைப் பொருள்
தெரியப்
பாரினிற் சொன்ன இராமாநுசனைப் பணியும்
நல்லோர்
சீரினிற் சென்று பணிந்தது என்ஆவியும் சிந்தையுமே''

''ஓதிய வேதத்தின் உட்பொருளாய் அதன் உச்சிமிக்க
சோதியை நாதன்என அறியாது உழல்கின்ற தொண்டர்
பேதமை தீர்த்த இராமாநுசனைத் தொழும் பெரியோர்
பாதம் அல்லால் என்றன் ஆருயிர்க்கு யாதொன்றும்
பற்றில்லையே!''

என்று இராமாநுஜ நூற்றந்தாதி இவர்தாம் ஞானத்தைப் பலவாறு கூறிப் போற்றிப் புகழ்கின்றது.

இவ்வாறு தம் அறிவாற்றலால் அவனியை வியக்கவைத்து ''வைணவ சமயத்திற்கோர் விடிவெள்ளி'' யாகத் திகழ்ந்த இராமாநுஜரைத் தம் வாளாற்றலால் வெற்றி கொள்ள நினைத்த சோழமன்னன் ஒருவன் வரலாறும் இங்கு நாம் கூறாமல் இருக்க இயலாது.

சமயவெறி கூடாது என்பதே உண்மையான சமயச் சான்றோர்களின் கோட்பாடு ஆகும். ''மதமெனும் பேய் பிடியாதிருக்க வேண்டும்'' என்று பாடுகின்றார் அருட்பிரகாச வள்ளல் பெருமகனார்.

ஆனால் மதமெனும் பேய் பிடித்த சோழமன்னன் ''சிவனுக்குமேல் உயர்ந்த பொருள் இல்லை'' என்று

ஓலையில் எழுதி அதற்கு இசைவு தருமாறும் இல்லை என்றால் ''கண்கள் பறி போகும்'' என்று எச்சரித்தான் அன்றைய மதப்பித்தனான சோழமன்னன்.

அம் மதவெறியனிடமிருந்து இராமாநுஜரைக் காக்க எண்ணம் கொண்ட அவர்தம் சீடர்கள் கூரத் தாழ்வாரும், பெரிய நம்பிகளும் இராமாநுஜரை மாற்றுடை பூணச் செய்து மேலை நாட்டிற்கு அனுப்பித் தாம் சோழப் படைவீரர்களால் சிறைப் பிடிக்கப்பட்டுச் சென்று வைணவ தரிசனம் ஓங்க தம் தரிசனம் (கண்களை) இழந்த வரலாறும் இராமாநுஜர் வரலாற்றில் காணப்படும் ஒரு அற்புதத் தியாக வரலாறு ஆகும்.

திருவரங்கத்திலிருந்து புறப்பட்டு மைசூருக்கு அருகில் இருக்கும் திருநாராயணபுரம் சென்று தீண்டாத குலத்தாரை எல்லாம் ''திருக் குலத்தார்'' ஆக்கி அருள் புரிந்த இராமாநுஜர் தம் கருணைக்கு எல்லையும் உண்டோ?

இறைவருக்கு முன் தீண்டாதார் என யாரும் இல்லை; எல்லாரும் தொண்டர் குலத்தீரே! திருக் குலத்தீரே! யாவருக்கும் பரம் பொருளை வழிபட உரிமை உண்டு என்று தள்ளிவைக்கப்பட்ட தீண்டா தாரைத் திருக்குலத்தார் ஆக்கி, யாவர்க்கும் வழிபடும் உரிமையைப் பெற்றுத் தந்த இராமாநுஜரை ''வைணவ சமயத்தின் விடிவெள்ளி'' என்றே உலகம் கொண்டாடி மகிழ்கின்றது.

மைசூரை ஆண்டிருந்த சமண மன்னனையும் அன்பினால் திருமால் அடியவர் ஆக்கி, அம்மன்னன் மகளைப் பிடித்திருந்த பேயை நீக்கி, அம்மன்ன னுக்கு ''விஷ்ணு வர்த்தனன்'' என்ற பெயர் சூட்டிய பெருமை நம் இராமாநுஜருக்கு உண்டு.

முகம்மதியர்களால் கொள்ளை அடிக்கப்பட்டு டெல்லிக்குக் கொண்டு செல்லப் பெற்றிருந்த திருநாராயண உற்சவமூர்த்தியை ''என் அருமைச் செல்வப் பிள்ளாய் வா'' என அழைத்து, டெல்லி பாதுஷாவின் அனுமதியோடு மீட்டு வந்த நம் இராமாநுஜரை ''மதப் புரட்சி செய்த மகான்'' என்றும் இப்பேருலகம் பெருமை மிகப் போற்றிப் புகழ்கின்றது.

இராமாநுஜர் சமய வெறியைக் கடிந்தவர்; சாதிப் பேதங்களைக் கடந்தவர்.

இவ்வையம் உய்ய அவர் அருளிச் செய்த 6 அறிவுரைகள் பின் வருமாறு:

1. ஆழ்வார்கள் திருவாய் மலர்ந்த ஈரத்தமிழ் நாலா யிரத் திவ்வியப் பிரபந்தப் பாசுரங்களை நாளும் ஓத வேண்டும், பிறரும் ஓதச் செய்ய வேண்டும்.
2. திருமாலின் நூற்றெட்டு திருப்பதிகளின் திருப் பணிகள் செவ்வனே நடைபெறவும், வழிபாடுகள் சிறப்புற நடைபெறவும் உதவ வேண்டும்.
3. மைசூர் மாநிலத்தில் உள்ள திருநாராயணபுரத் தில் ஒரு குடிசையாகிலும் கட்டிக்கொண்டு அங்குச் சில நாட்கள் தங்கி வழிபாடு செய்து உய்யவேண்டும்.
4. திருமால் திருமகளுக்கு முதன் முதலாய் உபதேசித்த

   ''ஸ்ரீமந் நாராயண சரணௌ சரணம் பிரபத்யே'

   ஸ்ரீமதே நாராயணாய நம''

   என்ற மந்திரத்தை ஆசாரியர் மூலமாகப் பெற்றுத் தினமும் ஓதிப் பயன்பெற வேண்டும்.
5. திருமால் அடியவர்கள் கூட்டத்துடன் சேர்ந்து வாழ்ந்து திருமால் நெறிப் பரவி வாழ வேண்டும்.
6. ஸ்ரீ பாஷ்யத்தைப் படித்தும், மற்றவர்கள் படிக்கும் படி செய்தும் வாழவேண்டும்.

சாதி வேற்றுமை இன்றித் திருமால் அடியார்கள் யாவரும் சமயத் தொண்டு, சமுதாயத் தொண்டு ஆற்றி வாழ்தல் வேண்டும் என்பதே இராமாநுஜர் வாழ்ந்து காட்டிய வாழ்வின் சாரம் ஆகும்.

இராமாநுஜருக்கு இன்னல் இழைத்த மதவெறி யான சோழன் ''கிருமி கண்ட சோழனாய்'' மாண்டு போக இராமாநுஜர் மீளவும் திருவரங்கம் வந்து தம் 120 வயது முடிய சிறப்புற வாழ்ந்து ''வைணவ சமயத்துக்கோர் விடிவெள்ளி''யாய் அளப்பரும் தொண்டுகள் புரிந்துள்ளார்.

''அற்புதன் செம்மை இராமாநுசன்
என்னை ஆளவந்த
கற்பகம் கற்றவர் காமுறு சீலன்
கருதரிய
பற்பல்லுயிர்களும் பல்லுலகு யாவும்
பரனதென்னும்
நற்பொருள் தன்னை இந்நானிலத்தே வந்து
நாட்டினனே''

எனும் இராமாநுச நூற்றந்தாதியின் போற்றுதலுக்கு இணங்க நாமும் இராமாநுசப் பெருந்தகையின் பெரும்புகழ் போற்றி, அவர் போற்றிய சமரச நெறி போற்றி வாழ்ந்திடுவோமாக!

★ ★ ★

வைகுண்ட ஏகாதசி

- டாக்டர் த. அமிர்தலிங்கம்

ஏகாதசி என்பது ஓர் உத்தம புண்ணிய காலம். ஏகாதசி விரதம் போல் சிறந்த விரதமில்லை என்பது முதுமொழி.

கிருதயுகத்தில் முரன் என்னும் அசுரன் ஒருவன் இருந்தான். தேவரையும், முனிவர்களையும் கொடுமைப்படுத்தினான். இந்திரன் வேண்டுதலுக் கிணங்க திருமால் முரனுடன் போரிட்டார். முரனும் முராரியும் ஆயிரம் ஆண்டுகள் போர் புரிந்தனர். முரனின் ஆற்றலைக் கண்டு வியந்த முராரி தாம் களைத்தவர் போல் பத்திரிகாச்சிரமம் சென்று சிம்மாவதி என்ற குகைக்குள் பள்ளி கொண்டார். முரன் திருமால் இருக்கும் இடத்தைக் கண்டுபிடித்து அவரைக் கொல்ல வாளை ஓங்கினான். அப்போது திருமாலின் உடலிலிருந்து ஒரு கன்னிகை உதித்தாள். ஆயுதங்களைத் தாங்கி முரனைப் போருக்கு அழைத் தாள். அரக்கன் அம்பு எடுக்கு முன் அம்பிகை ரீங்காரம் செய்ய, முரன் சாம்பல் ஆனான். திருமால் தாம் கொண்ட அறிதுயில் விழித்து அம்பிகையைப் போற்றினார். அம்பிகைக்கு ''ஏகாதசி'' எனப் பெயர் தந்தார்.

மார்கழி கிருஷ்ண பட்ச (தேய்பிறை) ஏகாதசிக்கு உற்பத்தி ஏகாதசி என்பது பெயர். அன்றுதான் திருமால் உடலில் அம்பிகை ''ஏகாதசி'' உருவாகிய நாள். இந்நாளில் உபவாசமிருந்து பரமனைப் பூஜிப்போர் பரமபதம் அடைவர். இம்மையிலும் கோரிய பயனைப் பெறுவர். மார்கழி சுக்கில பட்ச (வளர்பிறை) ஏகாதசிக்கு மோட்ச ஏகாதசி என்பது பெயர். இதைப் பெரிய ஏகாதசி என்றும் வைகுண்ட ஏகாதசி என்றும் கூறுவார்கள். அச்சமயம் அச்சுதனை அர்ச்சிப்போர் மோட்சம் அடைவர். அவர்களது மூதாதைகளும் முக்தி பெறுவர்.

தை மாத கிருஷ்ண ஏகாதசிக்கு சபலா என்பது பெயர். இந்த ஏகாதசியில் சகல கனிகளையும் நிவேதனம் செய்ய, சகல பாபங்களும் அகலும்.

தை மாத சுக்கில ஏகாதசி புத்ரதா எனப்படும். புத்திர பாக்கியம் இல்லாதார் விரதமிருக்க புத்திர பாக்கியம் உண்டாகும்.

மாசி மாதம் கிருஷ்ண ஏகாதசி சட்திலா எனப் பெயர் பெறும். பசிப் பிணியில்லாமல் வளமுடன் வாழ வரமளிக்கும் விரதமிது. மாசி மாதம் சுக்கில ஏகாதசி ஜயா எனப்படும். பேய்க்கும் நற்கதி தரும் விரதமிது.

பங்குனி கிருஷ்ண ஏகாதசி விஜயா எனப்படும். எண்ணியுள்ள காரியங்களில் வெற்றி தந்து அவரவர் கோரும் விருப்பத்தைப் பூர்த்தி செய்யும்.

பங்குனி சுக்கில ஏகாதசிக்கு ஆமலகி என்று பெயர். நெல்லி மரத்தருகே சுத்தம் செய்து விரத மிருக்க எல்லாப் புண்ணிய நதிகளிலும் நீராடிய பலன் கிடைக்கும்.

சித்திரை கிருஷ்ண ஏகாதசி 'பாபமோசனிகா' எனப்படும். இழந்த பேறுகளைத் திரும்பப் பெறலாம்.

சித்திரை சுக்கில ஏகாதசி காமதா எனப்படும். எந்த ஆசை கொண்டு இந்த ஏகாதசியை அனுட்டித் தாலும் அவ்வாசை பூர்த்தியாவது திண்ணம்.

வைகாசி கிருஷ்ண ஏகாதசி வருதினி எனப்படும். சேனைபோல் காக்கும். சகல பாவங்களையும் அகற்றி சௌபாக்கியம் அளிக்கும்.

ஆனி கிருஷ்ண ஏகாதசி அபரா எனப்படும். அன்று பகவானை திரிவிக்கிரமராகப் பூசிக்க பிரம்ம ஹித்தி, பொய்சாட்சி கூறுதல், குருநிந்தை முதலிய பாவங்கள் நீங்கும்.

ஆனி சுக்கில ஏகாதசி நிர்ஜலா எனப்படும். சகல ஏகாதசிகளின் பயனையும் இந்த ஏகாதசி விரதத்தால் பெற முடியுமென வியாசர், பீமனிடம் அறிவுறுத்திய ஏகாதசி இதுவாகும்.

ஆடி கிருஷ்ண ஏகாதசி யோகிநீ எனப் பெயர் பெறும். குஷ்டரோகத்தை அகற்றும் விரதம் இது.

ஆடி சுக்கில ஏகாதசி சயிநீ எனப்படும். தீபதானம் செய்த பலன் பெறலாம்.



ஆவணி கிருஷ்ண ஏகாதசிக்குக் காமிகா என்று பெயர். சொர்ணதானம் செய்த பலன் பெறலாம்.

ஆவணி சுக்கில ஏகாதசியும் தை மாத சுக்கில ஏகாதசிபோல் புத்ரதா எனவே பெயர் பெறும். புத்திர பாக்கியம் உண்டாகும்.

புரட்டாசி கிருஷ்ண ஏகாதசி அஜா எனப்படும். அரிச்சந்திரன் இவ்விரதம் இருந்து மனைவி, மகன், அரசு மீளப் பெற்றான்.

புரட்டாசி சுக்கில ஏகாதசி பத்மநாபா எனப்படும். வானம் மழைபொழிய மேற்கொள்ள வேண்டிய விரதம்.

ஐப்பசி கிருஷ்ண ஏகாதசிக்கு இந்திரா எனப் பெயர். நரகத்தில் துன்புறும் முன்னோர்களைச் சுவர்க்கம் சேர்க்கும் விரதம் இது.

ஐப்பசி சுக்கில ஏகாதசி பாபாங்குசா எனப் பெயர் பெறும். பாபத்தை அகற்ற அங்குசம் போன்றது. கங்கை முதலிய புண்ணிய தீர்த்தங்களில் நீராடியோர் பெறும் பயன்களை அளிக்கும்.

கார்த்திகை கிருஷ்ண ஏகாதசி ரமா எனப்படும். அரச போகம் அளிக்கும் விரதம் இது.

கார்த்திகை சுக்கில ஏகாதசிக்குப் பிரபோதனீ என்று பெயர். சகல புஷ்பங்களாலும் பெருமானை அர்ச்சிக்க, கோடி யுகம் விஷ்ணுலோகத்தில் வசிப்பர்.

ஆண்டில் அதிகமாக வரும் 25-வது ஏகாதசிக்குக் கமலா என்று பெயர். லட்சுமியின் உள்ளம் இவ் விரதத்தால் குளிர்வதால் அபரிமிதமாம் செல்வம் உண்டாகும்.

ஏகாதசி விரதம் அநுட்டிக்கும் முறை :

தசமி, துவாதசி திதிகளில் ஒரு வேளை உணவு உண்ண வேண்டும். ஏகாதசி அதிகாலையில் எழுந்து நீராடி நித்திய கர்மங்களை விதிப்படி அநுட்டிக்க வேண்டும். ஏகாதசி அன்று துளசி இலை பறிக்கக் கூடாது. ஆகவே, முதல் நாளே அதைப் பறித்து வைத்துக் கொள்ள வேண்டும்.

திருமாலுக்குப் பக்தி சிரத்தையோடு பூசை செய்ய வேண்டும். அன்று முழுவதும் உண்ணாமல் விரத மிருப்பது உத்தமம். பழங்களை நிவேதனம் செய்து உண்பது மத்திமம். அன்று எவருக்கும் அன்னதானம் செய்யக் கூடாது. பகலில் உறங்கக் கூடாது. இரவிலும் பெருமாளின் நினைவாகவே இருந்து கண் விழிக்க வேண்டும். துவாதசி அன்று காலைக் கடன்களை முடித்து பெருமாளைப் பூசிக்க வேண்டும். ஓர் அதிதிக்கு அன்னமளித்து நாம் புசிக்க வேண்டும்.

இங்ஙனம் ஏகாதசி விரதமிருந்தால் பாவம் அகலும், சந்ததி, செல்வம் பெருகும். ஞானம் பெருகும். மோட்சம் கிட்டும்.

★★★

தில்லைத் திருக்கோயில்

பேராசிரியர் டாக்டர் ச. மெய்யப்பன்

சிதம்பரத் (கோயில்) தலம் சைவர்களுக்கு முதன்மையானது. அவர்கள் இத்தலத்திற்கு அதிக முக்கியத்துவம் அளித்துப் போற்றி வருகின்றனர். இவ்வாறு கொள்வதற்கும், போற்றுவதற்கும் காரணம், இத்தலம் மூர்த்தி, தலம், தீர்த்தம் என்ற மூன்றாலும் மேன்மை பெற்று விளங்குவதே.

இத்தல மூர்த்தி ஓம் என்னும் பிரணவத்தின் வடிவாக நின்று நாதாந்தக் கூத்தாடும் நடராசப் பெருமான். ஐந்தெழுத்துச் சொரூபியாக விளங்கும் நடராஜப் பெருமானின் திருக்கூத்து, படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் என்னும் ஐந்தொழில்களையும் உணர்த்துகின்றது. எம்பெருமான் நடராஜர் தம் திருக்கூத்தின் மூலம் இவ்வைந் தொழில்களையும் நிகழ்த்தியருள்கின்றார்.

உலகம் விராட்புருடன் வடிவம்; திருவாரூர் அதன் மூலாதாரம்; திருவானைக்கா கொப்பூழ்; திருவண்ணாமலை மணிபூரகம்; திருக்காளத்தி கண்டம்; காசி புருவ மதியம்; சிதம்பரம் இருதயம் என்பர்.

உலகம் தோன்றிய காலம் முதற்கொண்டே நடைபெறும் ஆனந்தத் தாண்டவத்தை நடராஜப் பெருமான் அடியார் பொருட்டு; இருதயத்தானமாகிய சிதம்பரத்தில் ஆடிக்காட்டியருள்கின்றார்.

சைவ உலகத்தில் தனிச் சிறப்புக் கொண்டு திகழும் இச்சிதம்பரத் தலத்தில் அமைந்து விளங்கும் விசேட தீர்த்தங்கள் பத்து. இவற்றுள் சிவகங்கை என்னும் தீர்த்தம் சிவ வடிவமாக அமைந்து விளங்குவதாகச் சிதம்பர மான்மியம் கூறுகின்றது. சிதம்பரத்தின் மூர்த்தி, தல, தீர்த்த விசேடத்தைக் குமரகுருபர சுவாமிகள்.

''மூர்த்தி அம்பலக் கூத்தனது உருவே''

''ஏத்த ருந்தலம் எழிற்புலி யூரே''

''தீர்த்தம் என்பது சிவகங் கையே''

எனக் கூறிப் போற்றுகின்றார்.

இத்தலத்துத் திருக்கோயிலில் சிற்றம்பலம், பொன்னம்பலம், பேரம்பலம், நிருத்தசபை, இராசசபை என்னும் ஐந்து மன்றங்களும் அமைந்திருத்தலும், சிவன் விஷ்ணு இருவர் திருச்சந்நிதிகள் ஒரே இடத்தில் நின்று தரிசிக்கும் படி அமைந்திருத்தலும் தனிச்சிறப்புகளாகும்.

பிரமா, விஷ்ணு, உருத்திரன் ஆகிய மும்மூர்த்திகளும் கோயில் கொண்டுள்ள திருத்தலம்.

மாணிக்கக் கூத்தனை வண்தில்லைக் கூத்தனைப்
பூணிற்ற மன்றுள் புரிசடைக் கூத்தனைச்
சேணுற்ற சோதிச் சிவானந்தக் கூத்தனை
ஆணிப் பொற் கூத்தனை யார் உரைப்பாரே
- திருமந்திரம்.

என்றும் இன்பம் பெருகும் இயல்பினால்
ஒன்று காதலித்து உள்ளமும் ஓங்கிட
மன்றுளார் அடியாரவர் வான்புகழ்
நின்றது எங்கும் நிலவி உலகெலாம்
- பெரியபுராணம்

இத்தலத்தின் புனிதமரம் - தலவிருட்சம் - தில்லை மரம். இது திருமூலட்டானக் கோயில் மேற்குப் பிரகாரத்தின் மேல்பால் இருக்கின்றது; கருங்கல் வடிவத்தில் செய்து வைக்கப்பட்டுள்ளது.

சிதம்பரம் பஞ்சபூதத் தலங்களுள் ஒன்று; ஆகாயத் தலமாக அமைந்து விளங்குவது.

பொதுவாக ஒரு தலத்தின் பெருமை, அத்தலத்துக் கோயிற் சிறப்பாலும், மூர்த்தி சிறப்பாலும், தீர்த்த விசேடத்தாலும், அத்தலத்தில் நிகழும் அருளற்புத நிகழ்ச்சிகளாலும், அத்தலத்தில் தோன்றும் பெரியோர்களாலும், அத்தலத்தில் முக்தி எய்தும் பெரியோர்களாலும், அத்தலத்தைப் பெரியோர்கள் போற்றிப் பாடுவதாலும், இவை போன்ற பிற வகையாலும் அமைவதாகும். இப்பெருமைகள் அனைத்தும் பெற்றுள்ளது சிதம்பரத்தலம்.

ஊமைப்பெண் பேசிய அற்புதம்

சிவத்தலங்கள் பலவற்றையும் வழிபட்டுக் கொண்டு இறுதியில் தில்லையம்பதியை வந்தடைந் தார் மாணிக்க வாசக சுவாமிகள்; இத் தலத்தில் தங்கி எம்பெருமானை வழிபட்டுக் கண்டபத்து, குலாப் பத்து, மூன்று அகவல்கள், குயில்பத்து, கோத்தும்பி, திருப்பூவல்லி, திருத்தோணோக்கம், திருத்தெள்ளே ணம், திருப்பொற்சுண்ணம், திருப்பொன்னூசல், திருவுந்தியார், அன்னைப்பத்து, கோயில் பதிகம், கோயில் மூத்த திருப்பதிகம், எண்ணப் பதிகம், ஆனந்த மாலை, திருப்படையெழுச்சி, யாத்திரைப் பத்து முதலியன பாடியருளினார்.

மாணிக்கவாசகர் தில்லையில் இவ்வாறு வாழ்ந்து வரும் நாள்களில், சிவனடியார் ஒருவர் ஈழநாடு சென்றார். அங்கே தாம் செல்லுமிடங்களிலெல் லாம் 'பொன்னம்பலம்' 'பொன்னம்பலம்' என்று சொல்லி வந்தார். இதைக் கண்ட புத்தர்கள் மனம் பொறாதவர்களாய், இவரை மன்னனிடம் கொண்டு சென்றனர். இவ்வடியார் மன்னன் முன்பும் 'பொன் னம்பலம்; பொன்னம்பலம்' என்று சொல்லியமர்ந் தார்; தில்லைப் பொன்னம்பலத்தின் பெருமையை யும் விளக்கிக் கூறினார்.

அதைக் கேட்டுணர்ந்த புத்த மன்னன், தில்லை அடைந்து புத்தசமயத்தை நிலைநாட்ட வேண்டும் என்று கருதி, புத்தகுருவுடனும், தன் ஊமைப் பெண்ணு டனும் புறப்பட்டுத் தில்லை வந்தடைந்தான்.

தில்லை வந்தடைந்த புத்த குரு, தில்லையிலுள் ளாரை வாதுக்கு அழைத்தார். அந்நிலையில் இறைவன் தில்லை வாழந்தணர் கனவில் தோன்றி, மாணிக்க வாசகரைக் கொண்டு புத்தரை வெல்லுமாறு பணித் தருளினார்.

மாணிக்கவாசகரும் சிற்றம்பலத்தில் அறிஞர்கள் முன்னிலையில் புத்த குருவை நோக்கி, 'உன் வாதம் என்னை?' எனவினவ, அவர் புத்தசமயக் கொள்கை களைக் கூறினார். அவற்றைக் கேட்ட மாணிக்க வாசகர், சைவ சமய உண்மைகளை எடுத்துக்கூறி, புத்தசமய வாதத்தை மறுத்தருளினார். புத்தகுரு அதை ஏற்காத நிலையில், மாணிக்க வாசகர் எம்பெருமான் திருவருளை நினைந்தார். அந்நிலையில் கலைமகள் புத்தர்கள் வாக்கினின்றும் நீங்கி அவர்களை ஊமர் களாக்கினாள்.

அதைக் கண்ட புத்த மன்னன், உடனே மாணிக்க வாசகரை நோக்கி, 'பேசுபவர்களை ஊமர்களாக்கிய தாங்கள் ஊமையாகிய என் மகளைப் பேசச் செய்தால், நாங்கள் அனைவரும் சைவர்களாகி விடுவோம்' என்றனன்.

மாணிக்கவாசக சுவாமிகள் உடனே பிறவி ஊமை யாகிய அப்பெண்ணைப் பல கேள்விகள் கேட்க, அப்பெண் வாய் திறந்து பேசிப் பதில் கூறினாள். மாணிக்கவாசகர் இவற்றைத் 'திருச்சாழல்' எனத் தொகுத்தருளினார்.

புத்த மன்னன் சைவனாயினான். அம்மன்னன் வேண்ட, மாணிக்கவாசகர் புத்த ஊமர்களைப் பேசச் செய்தருளினார். அவர்கள் அனைவரும் சைவராயினர்.

அம்பலக் கூத்தனே அதன் பொருள்

அதன்பின்னர் ஒருநாள் இறைவன் அந்தணவுரு வுடன் மாணிக்கவாசகரை அணுகி, தாம் பாண்டி நாட்டினர் என்று கூறி, திருவாசகம் முழுமையும் மாணிக்கவாசகர் சொல்ல, ஏடும் எழுத்தாணியும் கொண்டு எழுதி முடித்தார். பின், 'பாவை பாடிய வாயால் கோவை பாடுக' என்று மாணிக்கவாசகரைப் பணித்தருளினார்.

மாணிக்கவாசகர் உடனே திருச்சிற்றம்பலக் கோவை பாடியருள, அந்தண வுருவினராய இறைவன் அதையும் எழுதியருளி, 'மாணிக்கவாசகன் சொல்ல அழகிய சிற்றம்பலம் உடையான் எழுதியது' என்று கைச்சாத்திட்டுச் சிற்சபையின் பஞ்சாட்சரப்படியில் ஒருவரும் காணாதவாறு வைத்து மறைந்தருளினார்.

தில்லைவாழந்தணர்கள் இவ்வேட்டை மணி வாசக அடிகட்குக் காட்டி, இப்பாடல்களின் பொருள் கூற வேண்டினர். மாணிக்கவாசக சுவாமிகளும் அவர் களை அழைத்துத் தில்லைக் கூத்தப் பெருமானைக் காட்டி, 'இவரே பொருள்' எனக்கூறி, அம்பலக்கூத்தன் அடிமலரில் இரண்டறக் கலந்தருளினார்.

சம்பந்தர் கணநாதரைக் காணல்

நாளும் இன்னிசையால் செழுந்தமிழ் பரப்பிய திருஞானசம்பந்தர்க்குத் தில்லைத் தலத்தில் திருக் கூத்தியற்றும் அம்பலவாணரைக் கண்டு வணங்க வேண்டும் என்ற ஆவல் அதிகமாயிற்று; தம் விருப் பத்தைத் தம் தந்தையாரிடம் தெரிவித்து, அவரோடும் மற்ற அடியார்களோடும் புறப்பட்டுத் தில்லைத் தலத்தின் எல்லையை நெருங்கி, தெற்கு வாயிலை அடைந்தார்.

திருஞான சம்பந்தரின் வருகையை அறிந்து தில்லை வாழ் அந்தணர்கள் அனைவரும் சிந்தை

மகிழ்ந்து, தமது நகரினை ஒப்பனை செய்து, மங்கல இயங்களின் முழக்கமும் மறையொலியும் சேர்ந் தொலிக்க, திசைகள்தோறும் விளங்கும் நிறை குடமும் விளங்க, வாயிலின் புறத்தே சென்று ஞானசம் பந்தரை எதிர்கொண்டு வாழ்த்துப் பல கூறி வர வேற்றனர்.

ஞானசம்பந்தரும் தொண்டர்களின் தூய உள்ளம் போல் தில்லையில் சிவமணங்கமழும் திருவீதி யினைக் கண்டு வணங்கி, எழுநிலைக் கோபுரத்தை வழுவில்லாத அன்புடன் தாழ்ந்து இறைஞ்சிப் பின்னர்த் திருக்கோயிலினுட்சென்று அன்னம் பாலிக் கும் பொன்னம்பலத்தைத் தொழுது, முடியின்கண் கரங் குவித்து கண்களில் நீர்த் ததும்ப அன்புடன் அம்பலத்தினுட் புகுந்தார்; ஆண்டவன் தமக்கு அருளிச் செய்த மெய்யறிவின் வடிவே அம்பலமாக வும், அவ்வறிவின் பயனாகத் தமது உள்ளத்தே நிறைந்து வழியும் பேரின்பப் பெருக்கே திருநடனமாக வும், தமது புறக்கண்ணிற்குப் புலனாயது கண்டு, அத் திருக்கூத்தினைப் பொன்மொழிகளால் போற்றினார்.

இவ்வாறு போற்றிய ஞானசம்பந்தர், 'உணர்வி னேர் பெறவருஞ் சிவபோகத்தை யொழிவின்றி யுருவின்கண், அணையும் ஐம்பொறியளவினும் எளிவர அருளினை' எனத் தம் கண்மாரி பொழியப் பாடி ஆடித்துதித்தார்: அம்பலவாணன் கழலேத்தும் செல்வத்தையே சிறப்புடை செல்வமாகக் கொண்ட தில்லைவாழந்தணரைப் பதிகத்துள் முன் வைத்து, 'கற்றாங் கெரியோம்பி' எனத் தொடங்கும் திருப் பதிகம் பாடினார்; தேனும் பாலும் தீங்கன்னலும் அமுதுமாய்த் தித்தித்து ஊனையும் உயிரையும் உருக்கும் உமையொருபாகன் திருக்கூத்தினை அகத்தே யன்றிப் புறத்தேயுங் கண்டு பெருமகிழ்வெய்தினார்; பின்னர்ப் பொன்னம்பலத்தை வலம் வந்து புறம் போந்து கோயிற்றிரு முற்றத்தில் வீழ்ந்து வணங்கி, நான்கு திரு வீதிகளையும் இறைஞ்சி, திருவேட் களம் சென்று, அங்குள்ள இறைவன் மீது பதிகம் பாடிப் பணிந்து, அங்குத் தங்கினார்.

திருவேட்களத்தில் தங்கிய ஞானசம்பந்தர் நாடோறும் தில்லைவந்து அம்பலவாணர் திருவடி களை வணங்கி வருவது வழக்கம்; ஒருநாள் திருக் கழிப்பாலை என்னும் திருத்தலத்துக்குச் சென்று, அங்கு எழுந்தருளிய இறைவனுக்கு அருந்தமிழ் மாலை சாத்தினார். நீலகண்ட யாழ்ப்பாணனாரும் அவரது திருப்பதிக இசையினைத் தமது யாழில் அமைத்துப் பாடிவந்தார். அந்நிலையில் ஒருநாள் ஞானசம்பந்தர் தில்லைக்குச் செல்லும்போது தில்லை வாழந்தணர்கள் அனைவரும் இறைவனருளால் கணநாதராகக் காட்சியளிக்கக்கண்டார். தாம் கண்ட அக்காட்சியினைப் பாணர்க்குக் காட்டிப் பரவச முறச் செய்தார்; பின்னர் அம்பலவாணர் திருமுன் சென்று, 'ஆடினாய் நறுநெய்' எனத்தொடங்கும் பதிகம் பாடி, தாம் கண்ட காட்சியை அதில் வைத்துப் போற்றினார்.

அப்பரடிகளின் உழவாரப்பணி

அப்பரடிகள் என்னும் திருநாவுக்கரசு சுவாமிகள் நிவா நதிக்கரையின் வழியாக நடந்து சென்று தில்லையம்பதியை அடைந்து, பொன்னம்பலத்திலே எந்நாளும் இன்பநடம் புரிந்தருளும் கூத்தப் பெரு மானைக் கண்டு கும்பிட்டு, நலமுற வீழ்ந்து வணங்கி எழுந்து மீண்டும் வீழ்ந்து வணங்கினார்; என்புருகப் பதிகம்பாடிப் போற்றிப் பணிந்தார்.

இவ்வாறு வணங்கி எழுந்த அப்பரடிகள் நெருப் பிற் பட்ட வெண்ணெய் போல மனங்கசிந்துருக, கூத்தன் குரை கழல் முன்நின்று, 'என்று வந்தாய்' என்னுந் திருக்குறிப்புடன் நடம்புரியும் நம்பன் நயத்தி னின்றும் பொழியும் திருவருளை வாரிவாரி மடுத்து, அம்மகிழ்ச்சிப் பெருக்கால் 'கருநட்ட கண்டனை' என்னும் திருவிருத்தமும், 'பத்தனாய்ப் பாட மாட்டேன்' என்னும் திருநேரிசையும் பாடியருளி னார்; பின்னர் எம்பெருமான் திருக்கோயில் முற்றத் திலும், திருவீதிகளிலும் உழவாரப்பணி செய்து கொண்டும், காலந்தோறும் கருநட்ட கண்டனைப் பணிந்து கொண்டும் சின்னாள் தங்கியருளினார்; அப்பொழுது 'அன்னம் பாலிக்கும் தில்லைச்சிற்றம் பலம்' என்னுந் திருக்குறுந்தொகை பாடியருளினார்.

மூவர் தேவாரம் கிடைத்தமை

சோழ நாட்டுத் திருநாரையூர் என்னும் தலத்தில் ஆதி சைவ மறையவர் குலத்தில் தோன்றிய நம்பி யாண்டார் நம்பி, அத்தலத்தில் எழுந்தருளியிருக் கும் பொல்லாப் பிள்ளையாரைப் பூசிக்கும் குடியைச் சார்ந்தவர். இவர் வேதங்களையும், ஆகமங்களை யும், தமிழ் இலக்கண இலக்கியங்களையும் உரிய பருவத்தில் பயிலத் தொடங்கினார்; ஒரு நாள் இவரின் தந்தையார் வேற்றூருக்குச் செல்லவே, தந்தையின் கட்டளைப்படியே பொல்லாப் பிள்ளையாருக்குப் பூசை செய்யச் சென்றார்; பிள்ளையாருக்குத் திரு மஞ்சனம் முதலியவற்றைச் செய்தபின், நிவேதனத்தை முன்வைத்து 'எம்பெருமானே, அமுது செய்தருள வேண்டும்' என்று விண்ணப்பித்துக் கொண்டார்.

விநாயகர் உண்மையாகவே நிவேதனத்தை ஏற் றருள்வார் என்று இளஞ்சிறுவர் நம்பியாண்டார் நம்பி

எண்ணியிருந்தார்; விநாயகர் அமுது செய்யாது இருப்பதைக் கண்டு, 'நாம் ஏதேனும் தவறு செய்து விட்டோமோ!' என்று எண்ணி உள்ளம் வருந்தினார்; பின்னர் வருத்தமிகுதியால் தலையைச் சுவரில் மோதிக்கொள்ளப் புகுந்தார். அதுகண்டு இரங்கிய பொல்லாப் பிள்ளையார் அச்சிறுவரைத் தடுத்து, நிவேதித்த நிவேதனத்தை அமுது செய்தருளினார். பிறகு அப்பொல்லாப் பிள்ளையாரே நம்பியாண்டார்க்குக் கல்வி கற்பித்தார். நாள்தோறும் இவ்வற்புதங்கள் நிகழ்ந்து வரவே; இச்செய்தி எங்கும் பரவியது.

அக்காலத்தில் தஞ்சையில் இருந்து அரசாண்டு வந்த சோழ மன்னன் சிவபக்தன். அவனிடம் வந்த சிவபக்தர்கள் தேவாரத்தில் சில பாசுரங்களைச் சொல்வது வழக்கம். அவற்றைக் கேட்ட சோழன், அவற்றின் இனிமையிலே உள்ளம் பறிகொடுத்து, தேவாரம் முழுவதும் எங்கே கிடைக்கும் என்று ஆராய்ந்தான்; எங்கும் கிடைக்காமற் போகவே வருந்தியிருந்தான்.

அவ்வாறு இருந்த சோழன், நம்பியாண்டார் நம்பியின் செய்தியை அறிந்தான்; உடனே 'அப்பெரியாரைக் கொண்டு நம் குறையைப் போக்கிக் கொள்வோம்' என்று எண்ணி, பூசைக்குரிய பொருள்களோடு திருநாரையூர் வந்தடைந்தான்; நம்பியைக் கண்டு வணங்கி, பொல்லாப் பிள்ளையாருக்குப் பூசையும் நிவேதனமும் செய்யும்படி வேண்டினான்; நம்பியும் அவ்வாறே செய்யக் கண்டு களித்தான்.

அதன் பின்னர் சோழமன்னன் நம்பியை அடிவணங்கி ''அடியேனுக்கு ஒரு குறை உள்ளது. மூவர் முதலிகள் அருளிச் செய்த தேவாரம் முழுவதும் எங்கும் கிடைக்கவில்லை. விநாயகமூர்த்தியின் திருவருள் துணைகொண்டு அவை கிடைக்கும்படிச் செய்ய வேண்டும்,'' என்று வேண்டினான்.

நம்பியாண்டார் நம்பியும் பொல்லாப் பிள்ளையாரை வணங்கி, அப்பெருமானுடைய திருவருளால் 'சிதம்பரத்தில் பொன்னம்பலத்தின் அருகே மூவர் திருக்கர முத்திரைகளோடு தேவார ஏடுகள் உள்ளன' என்று அறிந்தார்; அன்றியும் 'திருஞான்ம்பந்த மூர்த்தி நாயனார் பாடிய பதிகங்கள் பதினாறாயிரம்; திருநாவுக்கரசு நாயனார் பாடியவை நாற்பத்தொன் பதினாயிரம் பதிகங்கள்; சுந்தரமூர்த்தி நாயனார் பாடியவை முப்பத்தெண்ணாயிரம் பதிகங்கள்' என்றும் உணர்ந்து. இச்செய்திகளைச் சோழ மன்னனுக்குத் தெரிவித்தார்.

அதன் பின்னர் நம்பியாண்டார் நம்பியும், சோழ மன்னனும் சிதம்பரம் சென்று ஆங்குள்ள தில்லை வாழ் அந்தணரை வணங்கிச் செய்தியைக் கூறினர். மூவர் முதலிகளுக்கு விழா நடத்தி அவர்களை எழுந்தருளச் செய்து, குறிப்பிட்ட இடத்தில் தேடும் பொழுது, கறையான் புற்று மூடிக்கிடப்பது கண்டு திடுக்கிட்டனர். பின்னர் எண்ணெய் சொரிந்து புற்றினுள்ளே இருந்த சுவடிகளை எடுத்துப் பார்த்த பொழுது, பல பகுதிகள் கறையானுக்கு இரையாகிப் போயினவென்று அறிந்தார்கள். உள்ளவற்றை எடுத்துச் சோதித்து அடைவு படுத்தத் தொடங்கினார் நம்பியாண்டார் நம்பி. இவரே மூவர் தேவாரம், மணிவாசகர் திருவாசகம் முதலிய நூல்களைத் தொகைப் படுத்திப் பன்னிரு சைவத் திருமுறைகளை வகுத்தவர் ஆவார்.

அம்பலவாணர் அளித்த பரிசில்

சேரமான் பெருமாள் நாயனார் என்னும் பெரியார் வன்றொண்டராகிய சுந்தரமூர்த்தி நாயனாரைக் காணவும் பொன்னம்பலத்தை இறைஞ்சவும் விரும்பியவராய்த் தில்லைக்கு வந்தார்; திருச்சிற்றம்பலத்தை அடைந்தார்; இறைவனைப் போற்றிப் 'பொன்வண்ணத் தந்தாதி'யைப் பாடினார். இறைவனாரும் அதற்குப் பரிசிலாகக் காற்சிலம்பொலியைக் கேட்பித்தருளினார். (பொன் வண்ணம் என்று தொடங்கிப் பொன்வண்ணம் என்று முடிதலின், பொன்வண்ணத் தந்தாதி என்னும் பெயர் பெற்றது.)

உமாபதி சிவத்தின் கொடிக்கவி

தில்லைவாழந்தணர் மரபில் தோன்றியவர் உமாபதி சிவாச்சாரியார். சிவஞானபோதம் அருளிச் செய்த மெய்கண்டாரின் மாணாக்கராக அருணந்தி சிவாச்சாரியார் விளங்க, அவர் மாணாக்கராக மறைஞான சம்பந்தர் விளங்க, மறைஞான சம்பந்தரின் மாண்புறு நன்மாணாக்கராக நின்று, சந்தானாச்சாரிய மரபை முற்றுவிக்கும் நற்றவத்தவரே உமாபதி சிவாச்சாரியார்: இவர் சித்தாந்த சாத்திர நூல்கள் பதினான்கினுள் எட்டு நூல்களை அருளிச் செய்தவர். 'சித்தாந்த அட்டகம்' என இவரது எட்டுச் சாத்திர நூல்களும் தொகை கொடுத்து வழங்கப்பெறும்.

தில்லைவாழந்தணர் மரபில் தோன்றிய உமாபதி சிவாச்சாரியார், தில்லைக் கூத்தப் பெருமானுக்குப் பூசை முடித்துக் கோயில் மரியாதைகளுடன் பகல் நேரத்தில் இல்லம் சென்றார். அப்போது ஒரு வீட்டுத் திண்ணையில் அருளாளராக அமர்ந்திருந்த மறைஞான சம்பந்தர், பட்டப்பகலில் முன்னே ஒருவன் தீவட்டி எடுத்துச் செல்ல, பல்லக்கில் அமர்ந்து சென்ற உமாபதி சிவத்தைக் கண்ணுற்று, 'பட்டமரத்தில் பகற் குருடு போகிறது பாரீர்' என்று உமாபதி சிவத்தின் செவிகளிற் படுமாறு கூறினர்.

கார்ப்பூரத்தில் காட்டிய நெருப்புப் போல், பக்குவ முதிர்ச்சியின் மேல் மறைஞான சம்பந்தரால் அமைக்கப் பெற்ற ஞான வார்த்தைகள் சிவ ஞானத்தை விளைத்தன. அதைக் கேட்ட அளவி லேயே உமாபதி சிவாச்சாரியார் பல்லக்கிலிருந்து கீழே குதித்து மறைஞான சம்பந்தரின் திருவடிகளில் வீழ்ந்து, தம்மை மாணாக்கராக ஏற்றருள வேண்டு மெனப் பணிந்தார்.

மறைஞான சம்பந்தர் ஒன்றும் பேசாது திண்ணை யில் இருந்து எழுந்து சென்றார். உமாபதி சிவாச் சாரியார் அவரைப் பின்தொடர்ந்தார்.

மறைஞான சம்பந்தர் ஓர் இல்லத்தின் முன் நின்று உணவு கேட்க, அவ்வீட்டார் தம்மிடம் உள்ள கூழுணவை மறைஞான சம்பந்தரின் கைகளில் விட, அதனை அவர் வாங்கிக் குடித்தார், உமாபதி சிவாச் சாரியார் அவருடை கைகளின் இடுக்குகளிலிருந்து ஒழுகிய கூழைத் தம் கைகளால் ஏற்று, குருவருட் பிரசாதமாக எண்ணி உட்கொண்டார்.

அதனை அறிந்த தில்லைவாழந்தணர்கள், உமாபதி சிவாச்சாரியார் செயல் ஆசாரமற்றது எனக் கருதி, அவரைத் தம் குழுவிலிருந்தே நீக்கிவிட்டனர். அதனால் உமாபதி சிவாச்சாரியார் தில்லைக்குக் கீழ்ப்பகுதியில் உள்ள 'கொற்றவன் குடி' என்னும் ஊரில் தங்கி வாழ்ந்து வரலானார். அது முதல் அவர் 'கொற்றவன்குடி உமாபதி சிவாச்சாரியார்' என வழங்கப் பெற்றார்.

உமாபதி சிவாச்சாரியாரை நீக்கிய தில்லை வாழந்தணர் அடுத்தநாள் காலையில் கோயிலுக்குள் சென்ற போது, தில்லைக் கூத்தப் பெருமான் திரு மேனியைக் காணாது திகைத்தனர். அப்போது 'உமாபதி சிவத்தின் பெட்டகத்தில் இருக்கிறோம்' என்று ஓர் அசரீரி கூறியது.

அதன் பின்னர் தில்லைக்கூத்தப் பெருமான் திருவிழா நெருங்கியது. திருவிழாத் தொடக்கத்துக் காகக் கொடியேற்றம் நடத்தும்போது, கொடி மேலே ஏறாமல் தடைப்பட்டு நின்றுவிட்டது. அப்போது தில்லைவாழந்தணர்களின் வேண்டுகோளுக்காக இரக்கங்கொண்ட உமாபதி சிவாச்சாரியார், திரு வைந்தெழுத்து மந்திரத்தின் உட்பொருளாக, திரு வருளாணையைச் செயல்படுத்துவதாக, 'கொடிக் கவி' என்னும் நூலைப் பாடியருளினார். அந்நிலை யில் கொடி ஏற்றுவாரின்றித் தானாகவே ஏறியது.

பெத்தான் சாம்பான் முக்தி

பெத்தான் சாம்பான் என்பவன் தீண்டத்தகாத சாதியில் பிறந்தவன்; சிறந்த சிவபக்தன். இத்தகைய இவன், சிவஞானமும் திருவருள் நலமும் கைவரப் பெற்று விளங்கிய உமாபதி சிவாச்சாரியாரின் அருமை பெருமைகளை உணர்ந்து, அவருக்குத் தொண்டு செய்யவேண்டும் என்று எண்ணி, நாடோறும் விறகுக் கட்டு ஒன்றை அவரது திருமடத்திற்கொண்டு சென்று வைத்துவிட்டு வந்தான்.

அன்றாடம் யார் விறகுக் கட்டு கொண்டு வந்து வைப்பது என்பது எவருக்கும் தெரியாது.

அந்நிலையில் ஒருநாள் அடைமழை பெய்தது. பெத்தான் சாம்பானால் விறகுக் கட்டைக் கொண்டு போய் வைக்க முடியவில்லை. அதனால் அவன், திருத்தொண்டுக்கு ஊறு விளைந்ததே எனக் கவன்று கூத்தப்பெருமான் திருச்சந்நிதிக்கு நேரே தில்லை யின் எல்லையில் நின்று கதறியழுதான். அவ்வாறு கதறிய பெத்தான் சாம்பானிடம் இறைவன் தோன்றி ''கவலற்க'' எனக்கூறி, 'அடியார்க்கெளியான்' எனத் தொடங்கும் திருப்பாட்டு ஒன்று எழுதப்பட்ட ஓலை நறுக்கு ஒன்றைக் கொடுத்து, உமாபதி சிவாச்சாரி யாரிடம் கொண்டு போய்க் கொடுக்குமாறு பணித் தருளினார்.

திருச்சிற்றம்பலமுடையான் தந்த ஓலை நறுக்கை வாங்கிப் பார்த்த உமாபதி சிவாச்சாரியார், திருச் சிற்றம்பலமுடையான் திருக்கரத்தால் எழுதப் பெற்ற பாடலைப் படித்து, இறைவன் திருவருளை யும், பெத்தான் சாம்பானின் பக்குவப் பேற்றையும், அவனது திருத்தொண்டினது பெருமையையும் உணர்ந்து மகிழ்ந்தார்; பெத்தான் சாம்பானுக்குத் தீட்சை செய்து, இப்பிறவியிலேயே அவனுக்குச் சிவப் பேறு கிடைக்குமாறு செய்தார்.

இவரது செய்கையில் ஐயுறவு கொண்ட சிலர் வாதிட்டபோது, இவர்தம் திருமடத்தில் அபிடேக நீரில் செழித்து வளர்ந்திருந்த முள்ளிச் செடிக்கும் அம்முறையிலேயே தீட்சை செய்து, எல்லோரும் நேர் நின்று காண, அம் முள்ளிச்செடிக்கு முக்தி நல்கியருளினார்.

திருநாளைப்போவார் தரிசனம்

தில்லையை அடுத்துள்ள ஆதனூரில் தோன்றிய அரிசனத் தொண்டர் நந்தனார் என்னும் பெரியார். இவர் பல சிவத்தலங்கட்கும் சென்று புறவாயிலில் நின்றபடியே இறைவனைக் கண்டு வழிபட்டுவரும் இயல்புடையவர். இத்தகைய இவர், ஒருமுறை தில்லை செல்ல விரும்பினார்; தில்லைக்குச் சென்றால் தம் குலம் காரணமாக நடராஜப் பெருமானைக் கண்டு வழிபட முடியாது என்னும் கருத்தினால், 'நாளைச் செல்லலாம்' 'நாளைச் செல்லலாம்' என்று கூறிக்கொண்டிருந்து, இறுதி யில் ஒருநாள் தில்லை சென்றடைந்தார்; ஆனால்

அங்கும் தம் சாதி காரணமாக அம்பலத்துள் செல்ல விரும்பாமல் புறத்தே இருந்து எம்பெருமானை மனத்தால் நினைந்து வணங்கி, தம் பிறப்பைப் பற்றியே நினைந்து வருந்தித் துயிலச் சென்றார்.

அந்நிலையில் இறைவன் அவர் கனவில் தோன்றி, 'இப்பிறவி போய் நீங்க எரியினிடை நீ மூழ்கி நம் கோயிலினுள் புகுக' எனப் பணித்து, அவ்வாறே தில்லைவாழந்தணர்கட்கும் நந்தனுக்கு எரி அமைத்துத்தரப் பணித்து மறைந்தருளினார்.

மறுநாள் தில்லைவாழந்தணர்கள் அவ்வாறே தீ அமைத்துத்தர, திருநாளைப் போவார் அதில் மூழ்கி எழுந்து திருக்கோயிலுட் சென்று இறைவனுடன் இரண்டறக் கலந்தார்.

'நாளைச் செல்லலாம்', 'நாளைச் செல்லலாம்' எனக் கூறிக் கொண்டிருந்தவராதலால், நந்தனார் திருநாளைப் போவார் என்னும் பெயர் பெற்றார்.

திருப்பல்லாண்டும் தேரோட்டமும்

தில்லைத் தலத்தில் திருக்கோயில் கொண்டு ஆனந்தத் தாண்டவம் புரிந்தருளும் நடராஜப் பெருமானின் அடியார் சேந்தனார் என்னும் பெரியார்; இவ்வடியாரின் அன்பின் திறத்தை உலகிற்குக் காட்டவேண்டுமென்ற திருவருள் நோக்கத்துடன், மார்கழித் திருவாதிரைத் திருவிழாவில் எம்பெருமான் திருத்தேர் கொண்டருளும்போது, மழை பெய்யுமாறு செய்து தம்முடைய தேரைச் சேற்றில் அழுந்துமாறு திருவருள் பாலித்தார்.

அப்பொழுது 'சேந்தா! தேர் நடக்கப் பல்லாண்டு பாடுக' என்றதோர் ஒலி எல்லோரும் கேட்கும்படி விண்ணில் ஒலித்தது.

தேர் இழுக்கும் அடியார் குழுவில் ஒருவராய் நின்ற சேந்தனார், ''மன்னுக தில்லை! வளர்க நம் பக்தர்கள்' எனத் தொடங்கும் திருப்பல்லாண்டுத் திருப்பதிகத்தைப் பாடிப் போற்றினார்.

அந்நிலையில் எம்பெருமான் திருத்தேரும் வடம் பிடிக்காமலே தானே அசைந்து ஓடி நிலையினை அடைந்தது. இவ்வற்புதத்தைக் கண்டார் அனைவரும் சேந்தனாரின் பேரன்பின் திறத்தைப் பெரிதும் எண்ணி நெஞ்சம் நெக்குருகினர். பதின்மூன்று திருப்பாடல்களைக் கொண்ட இத்திருப்பல்லாண்டுத் திருப்பதிகம் ஒன்பதாந் திருமுறையின் இறுதிப் பதிகமாக அமைந்துள்ளது.

அம்பலவாணர் அடியெடுத்துக் கொடுத்தல்

தொண்டை நாட்டுக் குன்றத்தூரில் தோன்றியவர் அருணமொழித்தேவர் என்னும் பெரியார். இவர் சிறந்த சிவபக்தர்: 'சேக்கிழார்குடி' என்னும் குடியில் பிறந்தவர்; அதனால் சேக்கிழார் என்றே வழங்கப் பெற்றவர்.

சிவம் பெருக்கும் சீலராகிய சேக்கிழார், அநபாயன் என்றும், திருநீற்றுச் சோழன் என்னும் புகழ் பெற்ற இரண்டாம் குலோத்துங்க சோழனிடம் தலைமை அமைச்சராகப் பணி பூண்டு விளங்கினார்.

அக்காலத்தில் தமிழகத்தில் சமணம் பரவி வந்தது. சோழமன்னன் குலோத்துங்கன் சமணக் காப்பியமாகிய சீவகசிந்தாமணியைப் பெரிதும் விருப்பத்துடன் பயின்று வந்தான். அது கண்ட அமைச்சர் சேக்கிழார், அம்மன்னனது மனத்தைத் திருப்ப எண்ணி, சிவத்தொண்டர்களின் வரலாற்றையெல்லாம் தொகுத்து ஒரு காவியமாகப் பாடித்தரும்படி பணிக்க, அமைச்சர் சேக்கிழாரும் அதற்கிணங்கி தில்லை வந்தடைந்து அம்பலவாணரைக் கண்டு வணங்கி வழிபட, அம்பலவாணர் 'உலகெலாம்' என்று அடியெடுத்துக் கொடுத்தருளினார். சேக்கிழார் அதனையே காப்பியத் தொடக்கமாகக் கொண்டு, திருக்கோயில் ஆயிரக்கால் மண்டபத்தில் அமர்ந்து, 'திருத்தொண்டர் புராணம்' என்னும் அருள் மணக்கும் காப்பியத்தைப் பாடி முடித்தார்.

அதனை அறிந்து மகிழ்ந்த குலோத்துங்கன், சேக்கிழாரையும், 'பெரியபுராணம்' என்னும் அக் காப்பியத்தையும் யானை மீதேற்றி நகர்வலமாகக் கொணர்ந்து சிறப்பிக்க, சேக்கிழார் சுவாமிகள் தில்லையிலேயே தம் காப்பியத்தை அரங்கேற்றியருளினார்.

மற்றும் இத்தில்லைத் தலத்தில் சுந்தரமூர்த்தி சுவாமிகள் பேரூர்ப் பெருமானைச் சிற்றம்பலத்தே கண்டு வணங்கிய அருளற்புதமும் நிகழ்ந்தது.

சிவநெறிப் பெரியார்களாகிய திருநீலகண்டர், கோச்செங்கட்சோழர், கணம்புல்லர், கூற்றுவர் முதலான நாயன்மார்களும், மறைஞான சம்பந்தராகிய சந்தான குரவரும், இரணியவர்மனும் வியாக்கிரபாதர், பதஞ்சலி, உபமன்யு, வியாசர், சுகர் முதலிய முனிவர்களும் இத்தலத்தில் முக்தியடைந்து பெருமை சேர்த்துள்ளனர். சிவத்தலங்களுள் இறைவனருளற்புதங்களால் பெருமைகள் நிறைந்தது தில்லைத்தலம்.

★★★

பிரம்மாவிற்கு வேத உபதேசம் செய்த திருத்தலம்

அருள்மிகு வேதநாராயணப் பெருமாள் திருக்கோயில்

திருக்கோயில் வெளியீடு

இருப்பிடம்

திருச்சி மாவட்டம், தொட்டியத்திலிருந்து காட்டுப்புத்தூர் செல்லும் சாலையில் அரசலூர் கைகாட்டியிலிருந்து தெற்கே 2 கி.மீ. தொலைவில் திருநாராயணபுரம் அமைந்துள்ளது. திருச்சி ஈரோடு செல்லும் இரயில் மார்க்கத்தில் லாலாபேட்டை இரயில்வே நிலையத்திலிருந்து காவிரி நதிக்கு வடகரையில் உள்ள வரதராஜபுரம் கிராமத்திற்கு மேற்கே 1 கி.மீ. தொலைவில் உள்ளது. திருச்சியிலிருந்தும், முசிறியிலிருந்தும் பேருந்து வசதி உள்ளது.

அமைப்பு

இத்திருத்தலம் நீர்வளம் மிகுந்த சோலைகளுக்கு நடுவில் காவிரி நதிக்கு வடபுறத்தில் அமைந்துள்ளது. கோவில் கிழக்கு நோக்கி உள்ளது. கோவில் முன்பு நாலுகால் மண்டபம் உள்ளது.

கோவில் நுழைவாயிலில் இடதுபுறம் கருடனும் வலது புறம் அனுமன் உருவமும் மதில் சுவரில் அமையப்பெற்றுள்ளது. கோவிலில் நுழைந்தவுடன் கம்பத்தடி ஆஞ்சநேயரும், அதனை அடுத்து கொடிமரமும், பலி பீடமும் உள்ளது.

இடது புறத்தில் திருக்கோயில் அலுவலகம், ஆழ்வார் மண்டபம், வாகன மண்டபம். அதனை அடுத்து கிழக்கு முகமாக ஸ்ரீ ஆண்டாள் திருப்பாவை 30 பாடல்கள் பதிக்கப்பட்டுள்ளது. முன்வாயிலில் 3 நிலைகளையுடைய அழகான கோபுரம் உள்ளது.

இத்திருக்கோயிலில் இரண்டு பிரகாரம் உண்டு. வெளிப்பிரகாரத்தில் தேரோட்டம் நிகழும். உள் பிரகாரத்தில் பெருமாளுக்கும், தாயாருக்கும் தனித் தனி சன்னிதி உள்ளது. பெருமாள் சன்னிதி முன்பு கண்ணாடி அறையும், நாற்கால் பொன்மண்டபமும், அதில் ஒரு தூணில் குழந்தை வடிவில் கண்ணன் உருவமும் உள்ளது. பெருமாள் சன்னிதி உள்வாயிலில் மேற்கு முகமாக கருடன் சன்னிதியும் தெற்கு முகமாக சேனை முதலியார் சன்னிதியும் உள்ளது.

பெருமாள் சன்னிதி உள்ளே இடது புறத்தில் சரஸ்வதி பீடம் உள்ளது. வாயிலில் துவாரபாலகராக ஜெயன், விஜயன் மற்றும் சண்டன், பிரசண்டன் ஆகியோர் காப்பாளராக உள்ளார்கள்.

கருவறையில் பெருமாள் இருக்கு, யஜுர், சாமம், அதர்வணம் என்ற நான்கு வேதங்களையும் தலையணையாக வைத்து, ஆதிசேடன் மீது பள்ளி கொண்டு வலக்கையால் பிரம்மாவிற்கு வேத உபதேசம் செய்கிறார். பாதத்தில் ஸ்ரீதேவி, பூதேவி, பாதசேவை செய்கிறார்கள். பெருமாள் திருவடிக்கு கீழ் பிரகலாதன் குழந்தை வடிவில் அமையப்பெற்றுள்ளார். மூலவர் வேதநாராயணர், உற்சவரும் அவரே.

பெருமாள் சன்னிதிக்கு தென்கிழக்கில் மடைப்பள்ளியும் தெற்கில் தாயாருக்கு தனிச் சன்னதியும் உள்ளது. சுற்றிலும் ஆண்டாள் சன்னிதி, பெருமாள் திருவடி, வில்வ மரம், திருக்கோயில் கிணறு, திருமால் 10 அவதாரமும், 12 ஆழ்வார்கள் வரையப்பட்ட பரமபதவாசல், யாகசாலை, உக்கிராணம் ஆகியவை அமைந்துள்ளன.

கோபுரத்துக்கு வெளியில் வடக்கு திசையில் ஸ்ரீ ஆண்டாள் திருமண மண்டபத்திற்குச் செல்லும் நுழைவாயிலும், கிருஷ்ணன் மண்டபமும் உள்ளது. இதன் முன்பு பழமையான தகரக்கொட்டகை, நெற்களஞ்சியம் மற்றும் மின்சார அறை உள்ளது.

திருக்கோவில் சுற்றளவு கிழமேலடி 248, தென் வடலடி 133 கொண்டதாகும். வழிபடுவோருக்கு வசதியாக குடிநீர் மற்றும் கழிப்பறை வசதி செய்யப் பட்டுள்ளது.

தீர்த்தம் : கோவிலுக்கு தெற்கே ஓடும் காவிரி நதியே தீர்த்தமாகும்.

தலவிருட்சம் : வில்வ மரம்

தோன்றிய காலம்

இக்கோயில் மிகவும் பழமையும், சிறப்பும் வாய்ந்தது. கட்டிடக்கலை அமைப்பைப் பொறுத்த வரை இது நாயக்கர் காலமாகிய 15ம் நூற்றாண்டைச் சார்ந்ததாகும்.

இக்கோயிலின் பழமையையும், முற்கால மன்னர்களின் தர்மங்களையும், அறிவிப்பதற்குப் பல கல்வெட்டுக்களும், தாமிர சாசனங்களும் உள்ளன. இவைகள் அரசால் பிரதிகள் செய்யப்பட்டுள்ளன.

வேத முதல்வன் விளங்குபுரி நூலன்

இத்தலம் ஆதியில் கருடனால் ஸ்தாபிக்கப் பெற்றது. சுக்ரீவன், பிரகலாதன் ஆகியோருக்கு அருளினார். பிள்ளைத் திருநறையூர் அரையருக்கு மோட்சம் அளித்தார். ஸ்ரீரங்கம் போலவே பெருமாள் ஆதிசேடன் மீது பள்ளி கொண்டுள்ளார். பாதத்தில் ஸ்ரீதேவி, பூதேவி பாத சேவை செய்து கொண்டுள்ளார் கள்.

இத்தலம் ஆதிரங்கம் என்றும் சதுர்வேதி மங்களம் என்றும் வேதபுரி என்றும் அழைக்கப்பட்டது.

பிரகலாதனுக்கு அருளிய பெருமாள்

அசுரவேந்தனாகிய இரணியனின் மகன் பிரக லாதன், நாராயணன் பக்தனாக இருந்ததால், அவனை இரணியன் வெறுத்தான். இருவருக்கும் கடும் விவாதம் நடைபெற்றபோது, நாராயணர் கடும் கோபத்துடன் நரசிம்ம வடிவில் இரணியனைக் கொன்று சீற்றத் துடன் நின்றார். சீற்றம் தனிய பிரகலாதன் இறை வனைப் புகழ்ந்து பாடியதால் மனம் குளிர்ந்த இறைவன், உனக்கு வேண்டியதை கேள் என்றார். பெருமானை சாந்தரூபத்தில் காண வேண்டும் என்றார். நீ வேண்டியது போல் உனக்குத் திருநாராயண புரத்தில் சாந்த ரூபத்தில் காட்சி அளிப்பேன் என்று கூறினார். அவ்வண்ணமே செய்தருளினார்.

அரையருக்கு அருளிய அருளாள்ன்

முன்பு ஒரு காலத்தில் இக்கோயில் பனை ஓலையால் வேயப்பட்டிருந்தது. பிள்ளைத் திருநறை யூர் அரையர் தன் குடும்பத்தோடு பெருமானைச் சேவித்த போது கோயிலில் தீ பரவியது கண்டு பெருமாள் திருமேனிக்குத் தீங்கு ஏற்படுமே எனக் கலங்கிய அரையர், ஆறு குழந்தைகளுடன் பெருமாள் திருமேனிக்கு அக்னி உபாதை ஏற்படா வண்ணம் பெருமாள் திருமேனியை அணைத்தவாறு மோட்சம் அடைந்தனர்.

''பிள்ளைத் திருநறையூர் அரையர் திருமேனியை உபேக்ஷித்தாற்போல்''

என்கிற வாக்யம் ஸ்ரீ வசன பூசனத்தில் வருகிறது. எனவே அரையருக்கு மோட்சம் கொடுத்ததால், பிள்ளைத் திருநறையூர் அரையரின் அபிமான க்ஷேத்திரமாகும்.

கருணை பொழியும் கம்பத்தடி ஆஞ்சநேயர்

சத்தியத்தை நிலை நாட்ட இவ்வட்டார மக்கள் கம்பத்தடியானுக்கு முன் சத்தியமாக சொல்வாயா என உறுதி செய்யும் வழக்கம் உள்ளது. வழிபாட்டின் பலனை உடனடியாக அளிக்கக்கூடிய வரப்பிரசாதி.

நிறைவேற்றப்படும் சிறப்பு வேண்டுதல்கள்

பெருமாள் பிரம்மாவிற்கு வேத உபதேசம் செய் ததாலும் சரஸ்வதி பீடம் அமைந்திருப்பதாலும் **கல்வி சம்பந்தமான வேண்டுதல்களுக்குத் தனிச் சிறப்பு வாய்ந்த தலமாகும்.** தவத்தால் பிரகலாதனுக்கு அருளியதால், பக்தர்களுக்கு அருள் புரியும் கருணைக் கடலாகவும், அடியார் அரையருக்கு குடும்பத்துடன் மோட்சம் அளித்ததால் வேதனை தீர்க்கின்ற நாயகனாகவும் விளங்குகிறார். பெண்களுக் குத் **திருமணம், குழந்தைப்பேறு** போன்ற குறைகள் நீங்க அருள்மிகு வேதநாயகித் தாயாரை வழிபடுதல் சிறப்பாகும்.

ஒவ்வொரு மாதமும் இரண்டு ஏகாதசிகள், திருவோணம், அமாவாசை தினங்களில் காலை 11.00 மணிக்கு பெருமாள் திருமஞ்சனம் புறப்பாடு நடை பெறுகிறது.

ஒவ்வொரு வெள்ளிக்கிழமைகளிலும் மாலை 4.30 மணிக்கு, தனிக்கோயில் (ஸ்ரீ வேதநாயகித்தாயார்) திருமஞ்சனம்.

மாலை 6.00 மணிக்கு புறப்பாடு நடைபெறுகிறது.

மேலே கண்ட திருநாட்களில் அருள்மிகு வேத நாராயணப் பெருமாள் திருவடியை வழிபட்டு இன்புற்று பேரின்ப வீட்டினை அடைவோமாக.

நடைதிறப்பு

காலை 7.00 மணிமுதல் மதியம் 11.30 மணிவரை

மாலை 4.30 மணிமுதல் இரவு 8.00 மணிவரை.

உத்ஸவகாலங்களில் காலை 7.00 மணிமுதல் இரவு 9.00 மணிவரை பெருமாள் சேவை உண்டு.

★★★

"பதினெண் சித்தர்கள்"

- பொறியாளர் ஜி. வெங்கடேசன், எம்.ஈ., எம்.ஐ.ஈ.,

''குரு அருள் இல்லையேல் திருவருள் இல்லை'' என்பார்கள். மகான்கள் பலர் வாழ்ந்து அருள் செய்த மண் இது. இறைவனை இடைவிடாது தியானித்து சித்தத்தை அடக்கி, அகக்கண்களால் இறைவனைக் கண்டு ஆத்ம சக்தியால் செயற்கரிய செயல்களைச் செய்தவர்கள் சித்த புருஷர்கள். இவர்களைப் ''பதினெண் சித்தர்கள்'' என்று பைந்தமிழ் உலகம் கொண்டாடி வருகின்றது.

சித்தர்களின் வல்லமை

எட்டு நாகத்தை கையால் எடுத்து ஆட்டவும், இந்திரனார் உலகத்தை நாம் கேட்ட இடத்தில் காட்டவும், கட்டுக்கடங்காத பாம்பைக் கட்டிவிடவும் வல்லவர்கள். மேலும் ஆதிசேடன் ஆனாலும் அவர்கள் கையில் ஆட்டும் வல்லமை உள்ளவர்கள். நீதியோடு அவற்றையும் அடக்கி ஆடச் செய்ய வல்ல வர்கள். தூணைச் சிறு துரும்பாகவும், துரும்பைப் பெரு தூணாக்கவும் தோன்றச் செய்வர். மூன்று உல கங்களையும் பொன்னாகச் செய்வதும், செங்கதிரைத் தண் கதிராய் செய்து விடுவதும், இப்பெரிய உலகத்தை இல்லாமற் செய்வதும், இறைவன் செய்த சிருஷ்டிகள் போல் வேறு செய்யவும் வல்லவர்கள்.

64 கலைகள்யாவையும் கற்றவர்கள். அதற்கு மேல் ஒரு கலையானதை அறிந்தவர்கள்; ஆணைப் பெண் ணாகவும், பெண்ணை ஆணாகவும் ஆக்கவல்லவர் கள். எட்டு மலையையும் பந்தாய் எடுத்து எறிய வல்ல வர்கள். ஏழு கடலையும் குடித்து ஏப்பமிடுவதும், மண்டலம் முற்றும் கையால் மறைத்து விடுவதும், வானத்தையும் வில்லாய் வளைத்து விடுவதும் வல்ல வர்கள் என்று பாம்பாட்டிச் சித்தர் சித்தர்களுடைய வல்லமையைக் கூறுகின்றார்.

மொத்தம் 27 சித்தர்கள் வாழ்ந்ததாக வரலாறு கூறுகின்றது. அவர்களில் அகஸ்தியரின் சீடர்கள் 18 பேர். திருமூலரின் சீடர்கள் - 9 பேர். அவர்களின் விபரம் :

1) அகஸ்தியர் - அனந்தசயனம் பொதிகை மலை,
2) போகர் - பழனி
3) அழுகணிசித்தர் - நாகப்பட்டினம்
4) புலஸ்தியர் - ஆவுடையார் கோயில்
5) புலிப்பாணி - பழனி,
6) தேரையர் - பொதிகைமலை.
7) திருமூலர் - திருவாவடுதுறை,
8) சட்டநாதர் - திருவரங்கம்,
9) சிவவாக்கியர் - கும்பகோணம்,
10) புண்ணாக்கீசர் - சங்கனாஞ்சேரி,
11) கருவூரார் - தஞ்சாவூர், கரூர்,
12) கமலமுனி - திருவாரூர்
13) இராமதேவர் - அழகர் மலை
14) பாம்பாட்டி சித்தர் - துவாரகை, மருதமலை,
15) கோரக்கர் - திருகோணமலை, வடக்கு போய்கை நல்லூர்
16) சுந்தரானந்தர் - மதுரை
17) ஞானகவிஞர் - குஜராத்
18) மச்ச முனி - திருப்பரங்குன்றம்
19) குதம்பை சித்தர் - மயிலாடுதுறை
20) இடைக்காடர் - திருவண்ணாமலை
21) கொங்கணவர் - திருப்பதி
22) காளாங்கிநாதர் - காஞ்சிபுரம்
23) வால்மீகி - எட்டுக்குடி,
24) அகப்பை சித்தர் - திருவிடை மருதூர்,
25) யாகூப் - சைனா,
26) சட்டை முனி - கரூர்
27) கும்பமுனி - கும்ப கோணம்

தெய்வ நலம் சான்ற ஆறுபடை வீடுகளில் மூன்றாம் படை வீடாக திகழும் பழனியம்பதிக்கு ''சித்தன் வாழ்வு'' என்ற திருப்பெயரும், அதில் உறையும் ஞான தண்டாயுதபாணிக்கு ''சித்தநாதன்'' என்ற திருப்பெயரும் உண்டு.

மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே போக சித்தரும், அவருடைய சீடர்களான புலிப்பாணி, கொங்கணர், கருவூரார், சுந்தரானந்தர், மச்சமுனி, கோரக்கர், இடைக்காடர், கமலமுனி, சட்டைமுனி ஆகியோர் மகிழ்ந்திருந்த திருத்தலமே பழநியம்பதி யாகும்.

1. அகத்தியர்

இவர் ஆயில்யம் விண்மீன் கூடிய நன்னாளில் மார்கழி மாதம் பிறந்தவர்.

அகத்தியர் சித்தர்களில் முதன்மையானவர். இவருக்கு தட்சிணாமூர்த்தி என்ற பெயரும் உண்டு. சிவபெருமான் திருவருள் பெற்றவர். புலத்திய முனிவரின் சகோதரியாகிய உலோபா முத்திரையை மணந்தவர். கரக நீரால் காவிரி நதியைத் தோற்றுவித்தவர். சிவபெருமான் - உமாதேவியார் திருமணத்தின்போது வட இமயம் தாழ்ந்து, தென்பகுதி உயர்ந்த போது பூமியைச் சமநிலைப்படுத்த சிவபெருமானால் பொதிகைக்கு அனுப்பப்பட்டவர். ''என்றுமுள தென் தமிழ் இயம்பி இசை கொண்டான்'' என்று அகத்தியரைக் கம்பர் போற்றியிருப்பது குறிப்பிடத்தக்கது. இவர் அகத்தியர் இலக்கணம், அகத்தியர் சித்த வைத்தியம், அகத்தியர் ஞானம் முதலாக 96 நூல்கள் இயற்றியுள்ளதாக அறியப்படுகிறது.

இவர் அனந்தசயனத்தில் ஜீவசமாதி அடைந்தவர்.

2. போகர்

இவர் பரணி விண்மீன் கூடிய நன்னாளில் வைகாசி மாதம் பிறந்தவர்.

காலாங்கி நாதரின் முதல் மாணாக்கர். கற்பசாதனம் அறிந்தவர். ஏழு கடல்களைத் தாண்டியும், மேருவிற்கு அப்பால் சென்றும் வல்லமை பெற்று பழநியாண்டவரின் உருவத் திருமேனியை மூலிகைக் கட்டினால் (நவபாஷானம்) செய்து நிலை நிறுத்தியவர் இவர். சிங்கத்துக்கும், புலிக்கும், பூனைக்கும் ஞானோபதேசம் புரிந்தவர். இவர் செய்த நூல்கள் போகர் 7000, நிகண்டு 17,000, யோகம் ஆகியன. இவர் பழநியாண்டவரால் சித்தி பெற்றவர். இவர் பழநியில் ஜீவசமாதி அடைந்தவர்.

3. நந்தி தேவர்

இவர் விசாகம் விண்மீன் கூடிய நன்னாளில் வைகாசி மாதம் பிறந்தவர்.

சிவபெருமானை நோக்கி சிலாதமுனிவர் யாகம் புரிந்தபோது யாகம் செய்ய உழப்பட்ட நிலத்தில் உழுசாலில் பொன் பெட்டியில் சிவபெருமான் அருளால் தோன்றிவர். சகல கலை வல்லவர். சிவபெருமான் போல் நித்தியராய் எல்லோராலும் துதிக்கப்படுபவர். திருக்கயிலையில் வீற்றிருப்பவர்.

சிவபெருமானின் முதல் சீடர். நந்தீசர் 300, நந்தி யெட்டு, நந்தீசர் கருக்கடை ஆகிய நூல்களை இயற்றியுள்ளார். இவருக்கு கைலாயச்சித்தர் என்னும் பெயரும் உண்டு.

இவர் காசியில் ஜீவசமாதி அடைந்தவர்.

4. கோரக்கர்

இவர் அவிட்டம் விண்மீன் கூடிய நன்னாளில் கார்த்திகை மாதம் பிறந்தவர்.

மச்சேந்திரமுனி இவரை ''கோரக்கர்'' என்று அழைத்தினால் கோரக்கர் என்று பெயர் பெற்றார். இவர் மச்ச முனியின் மாணவர். பிள்ளைவரம் வேண்டிய ஒரு மலடிக்கு மச்சேந்திரர் திருநீறு வழங்கி ''மகவுண்டாகும்'' என்று ஆசி வழங்கினார். அம்மலடி பின் அத்திருநீற்றினைக் குப்பையில் இட்டுவிட, ஆண்டுகள் பல கழித்து, மச்சேந்திரர், ''மகவெங்கே?'' என்று கேட்க, திருநீற்றைக் குப்பையில் இட்டதாக அவள் கூற, மச்சமுனி ''கோரக்கா வா'' என அழைக்க குழந்தையாய்த் தளர் நடைபோட்டுத் தோன்றியவர் கோரக்கர். இவர் எழுதிய நூல்கள் மலைவாகடம், சந்திரரேகை, கோரக்கர் வைப்பு ஆகும். இவர் ஜீவசமாதி வடக்குப் பொய்கை நல்லூரில் உள்ளது.

5. சட்டை முனி

இவர் ஆவணி மாதம் மிருகசீரிடம் விண்மீன் கூடிய நன்னாளில் பிறந்தவர்.

இவர் காலம் அகத்தியர் காலம் என்பர். இவரும் போகரின் மாணாக்கர் ஆவார். இவர் செய்த நூல்கள் சட்டை முனி ஞானம் 200, சட்டை முனி ஞானம் 1200, திரிகாண்டம், சரக்கு வைப்பு, நவரத்தின வைப்பு, வாத நிகண்டு முதலியனவாகும். சமய ஒருமைப்பாட்டு கருத்துகள் இவரது பாடலில் மிகுதியும் காணப்படுகின்றன. கற்ப விதிகளைப்பற்றி பல நூல்களை எழுதியுள்ளார்.

''ஓதப்பா நாற்பத்து முக் கோணம் வைத்தே
உத்தமனே பூசை செய்வார் சித்தர்தானே''

எனவரும் இவர்தம் பாடல்வரிகள், இவர் பூஜையில் மகாமேரு யந்திரத்தைப் பயன்படுத்தியதை உணர்த்துகின்றன.

இவர் ஜீவ சமாதி திருவரங்கத்தில் உள்ளது.

6. சுந்தரானந்தர்

இவர் ஆவணி மாதம் ரேவதி விண்மீன் கூடிய நன்னாளில் பிறந்தவர்.

இவர் நவகண்ட ரிஷியின் பேரன். இவர் போகர் மாணாக்கரில் ஒருவர். இவர் மைசூர் அருகில் உள்ள கிஷ்கிந்தா என்னும் மலைச்சாரலில் வாழ்ந்தவர். பழனி மலைச்சாரலில் சிறிது காலம் வாழ்ந்தவர். இவர் செய்த நூல் ''வைத்திய திரட்டு''.

இவர் சக்தி பூஜை செய்து மதுரையில் ஜீவசமாதி அடைந்தவர்.

7. குதம்பைச் சித்தர்

இவர் ஆடிமாதத்தில் விசாக விண்மீன் கூடிய நன்னாளில் பிறந்தவர்.

பெண்கள் காதிலே அணியும் குதம்பை எனும் அணிகலனை இவர் ''குதம்பாய்'' என முன்னிலைப் படுத்திப் பாடியதால் ''குதம்பைச் சித்தர்'' எனப் பெயர் பெற்றார். கடவுளின் உண்மைத் தன்மையை அறிந்தவர் வீண் பகட்டுகளை விரும்பார் என்று கூறியுள்ளார்.

''மாங்காய்ப்பால் உண்டு மலைமேல் இருப்போர்க்குத்
தேங்காய்ப்பால் எதுக்கடி? குதம்பாய்!
தேங்காய்ப்பால் எதுக்கடி?''

என்ற இவர்தம் பாடல் நாடறிந்த ஒன்று. இது ஞானியர் ஞானநிலை உணர்த்தும் பாடலாகும்.

இவர் மயிலாடுதுறையில் ஜீவசமாதி அடைந்தவர்.

8. கொங்கணவர்

இவர் சித்திரை மாதத்தில் உத்திராடம் விண்மீன் கூடிய நன்னாளில் பிறந்தவர்.

போகரின் மாணாக்கரில் ஒருவரான இவர் கொங்கு நாட்டு ஊதியூர் மலையில் வாழ்ந்தவர். இரசவாதத்தில் வல்லவர். இவர் எழுதிய நூல்கள் கொங்கணார் கடைக்காண்டம், ஞானம் 100, குளிகை, திரிகாண்டம், வாலைக்கும்மி, மூப்பு திராட்சை, குணவாடகம் முதலியன. இவர் ஆன்மீகத்தையும், யோகத்தையும் மருந்துடன் இணைத்து மருத்துவம் செய்ய வேண்டும் எனக் கூறியுள்ளார்.

இவர் தவத்தில் இருக்கையில் கொக்கொன்று இவர் மீது எச்சமிட அதை அவர் பார்வையால் எரித்துச் சாம்பல் ஆக்கினார். இவர் தவம் நீங்கித் திருவள்ளுவர் வீட்டிற்குப் பிச்சை கேட்டு வந்தபோது, திருவள்ளுவரின் தேவியார் பிச்சையிட தாமதம் ஆனது. அதைக் கண்டு கொங்கணவர் கோபிக்க திருவள்ளுவரின் துணைவியார் ''கொக்கென்று நினைத்தாயோ, கொங்கணவா'' எனக் கேட்டதாக வரலாறு உள்ளது.

இவர் ஜீவசமாதி திருப்பதியில் உள்ளது.

9. கமல முனிவர்

இவர் வைகாசி மாதத்தில் பூசம் விண்மீன் கூடிய நன்னாளில் பிறந்தவர்.

இவர் ஒரு தேவசித்தர். இவர் போகரின் குரு. இவர் கமல முனிபத்து என்னும் ஞான நூலையும், வாதம், வைத்தியம், வசியம், யோகம் ஆகிய நூல்களையும் எழுதியுள்ளார். சீனாவில் சிறிது காலம் வாழ்ந்தவர். நான்காயிரத்து முன்னூறு ஆண்டுகள் வாழ்ந்தவர். இவர் திருவாரூரில் வாழ்ந்திருந்த காரணம் பற்றியே திருவாரூரைக் ''கமலாலயம்'' என்று வழங்குகின்றனர்.

இவர் ஜீவசமாதி திருவாரூரில் உள்ளது.

10. இராம தேவர்

இவர் மாசி மாதத்தில் புனர்பூசம் விண்மீன் கூடிய நன்னாளில் பிறந்தவர்

இவரை ''யாகோபு'' என்றும் அழைப்பர். யாகோபு கணக்காட்டம் 600, யாகோபு வைத்திய வாத சூத்திரம், ஞானக் கோவையில் ''இராம தேவர் பூஜாவிதி'' என்ற பெயரில் பத்து பாடல்கள் உள்ளன. இவர் ஜீவசமாதி அழகர் மலையில் உள்ளது.

இவர் எழுதிய ''இராமதேவர் பூஜாவிதி'' என்னும் நூல் வாயிலாக இறைவனை ஜோதியாக வழிபட வேண்டும் என்ற இவர்தம் கருத்து புலனாகின்றது. இவர் அகத்தியர், திருமூலர் காலத்தில் வாழ்ந்திருந்தவர். இவரைத் ''தேரையர்'' என்றும் கூறுவது உண்டு.

11. இடைக்காடர்

இவர் புரட்டாசி மாதத்தில் திருவாதிரை விண்மீன் கூடிய நன்னாளில் பிறந்தவர்.

இடைக்காடு என்னும் ஊரில் வாழ்ந்தவர். பொதிகை மலைச் சாரலில் ஆடு மேய்த்துக் கொண்டிருந்த இவர் ஞானியர் ஒருவருக்குப் பால் கொடுத்து உபசரித்து, அவரிடம் ஞான உபதேசம் பெற்றுச் சித்தரானார்.

ஒரு முறை மழையின்றி நாடு 12 ஆண்டுகள் பஞ்சத்தில் வாடும் என்பதை முன் அறிந்து, குருவரகு என்னும் தானியத்தை சேறோடு கலக்கிச் சுவர் வைத்து குடிசையொன்று கட்டிக் கொண்டு அதில் வசித்து வந்தார். தம் ஆடுகளையும் எருக்கிலை தின்று வாழு மாறு பழக்கிக்கொண்டார். பஞ்ச காலத்தில் ஆடுகள் சுவரைத் தேய்க்க, நாளும் உதிர்ந்த தானியம் உண்டு இவர் உயிர் வாழ்ந்து வரலானார்.

உயிர்கள் எல்லாம் பஞ்சத்தால் மாண்டுவிட, இவரும் இவரின் ஆடுகளும் உயிர் பிழைத்திருக்கும் அதிசயம் காண நவகோள்களும் இவரிடத்து வந்தனர். மழை பெய்வதற்கு உகந்தவாறு நவகிரகங்களை அமர்த்தி, மழை பெய்வித்து ஞாலத்தை வாழ்வித்த மாதவர் இவர். இளமையாக இருக்க காயகல்ப முறை பற்றி கூறியுள்ளார். ஊசிமுறி, அறுபது வருடபலம், சாரீரம் என்பன இவர் இயற்றிய நூல்களாகும். சித்தர் ஞானக் கோவையில் இவர் எழுதிய 140 பாடல்கள் இடம்பெற்றுள்ளன. இவர் ஜீவசமாதி திருவண்ணா மலையில் உள்ளது.

12. தன்வந்திரி

இவர் ஐப்பசி மாதத்தில் புனர்பூசம் விண்மீன் கூடிய நன்னாளில் பிறந்தவர். இவரைப் பாற்கடலில் பிறந்த தேவ வைத்தியர் என்றும் கூறுவது உண்டு. போகர்

''சக்தியுள்ள மகாவிஷ்ணு என்றே சொல்வர்
தாரணியில் மானிடமாம் சித்துவாகும்
முத்திபெற ஐப்பசியாம் திங்களப்பா
முனையான புனர்பூச நாளாறுகாலே'

என்று இவர் பிறந்ததை கூறியுள்ளார்.

ஸ்ரீ தன்வந்திரி பகவான் திருமாலின் மறு அவதார மாகவும், மூன்று உலகங்களின் நாதனாகவும், தேவர் களுக்கு மருத்துவராய் நின்று மருத்துவம் செய்பவ ராகவும், மருத்துவ விஞ்ஞானத்தை உலகிற்கு முதலில் அறிமுகம் செய்தவராகவும் மற்றும் ஸ்ரீரங்க நாதருக்கு வைத்தியம் செய்தவராகவும் போற்றப் படுகிறார். உலகின் முதல் மருத்துவரே தன்வந்தரி பகவான் ஆவார். இராமானுஜராலும், லக்ஷ்மி காவியம் அருளிச் செய்த கருடவாகன பண்டிதராலும், பெரியாழ்வாராலும் இவர் போற்றப்படுகிறார்.

அகஸ்தியரும் இவர் பெருமைகளை

''மாச்சலென்ற தன்வந்திரி வளப்பங் கூறுவேன்
மன்னவனே முன்பிறப்பில் விஷ்ணு வென்பார்
பாச்சலுடன் இப்பிறப்பில் தன்வந்திரி தானும்
பாலகனே மானிடராய்ப் பிறந்தார் காணே''

என்று கூறுகிறார். ''ஒரு சூரியனைப் போல் பிரகாசித்த வர்'' என்று இவருடைய கல்வி ஞானத்தை வியந்து போற்றுகிறார்.

ஆயுர் வேதத்தின் சிருஷ்டி கர்த்தா என்று கருதப் படும் தன்வந்திரி பல நூல்களை இயற்றியுள்ளார். வடமொழியில் மட்டுமின்றி தமிழிலும் எழுதியுள் ளார்.

இவர் ஒரு கையில் கமண்டலத்தையும், ஒரு கையில் கதையையும் வைத்துள்ளார். வாகட மருத்து வத்திலும் வல்லவர். தன்வந்திரி நிகண்டு, வைத்திய சிந்தாமணி, கலைஞானம், சிமிட்டு ரத்தினச் சுருக்கம் இவர் அருளிச் செய்த நூல்களாகும்.

ஸ்ரீரங்கத்தில் தன்வந்திரி பகவானுக்குத் தனி சன்னதி உள்ளது. அவர் வைத்தீஸ்வரன் கோயிலில் ஜீவசமாதி கொண்டுள்ளார்.

13. புலிப்பாணிச் சித்தர்

இவர் புரட்டாசி மாதம் சுவாதி விண்மீன் கூடிய நன்னாளில் பிறந்தவர்.

கன்னட நாட்டிலிருந்து வந்து போக சித்தரின் சீடர் ஆனவர். போகரின் முதல் மாணாக்கரும் முதல் சீடரும் இவரே ஆவார். இவருடைய இயற்பெயர் சிவலிங்க தேவ உடையார் என்பதாகும்.

சண்முக நதிக்குத் திருமஞ்சனத்திற்கு நீர் கொண்டு வரச் சென்றபோது குடம் உடைந்து போன தால், ஜலத்தைத் திரட்டிப் புலியை வரவழைத்துப் புலியின் பேரில் ஏறிக் கொண்டு வந்து பழநியாண்ட வருக்கு அபிஷேகம் செய்து வந்தபடியால் போக நாதரால் ''புலிப்பாணி'' என்று அழைக்கப்பட்டவர்.

புலிப்பாணி வைத்திய சாஸ்திரத்தில் 500 செய்யுள்களும், பல திரட்டில் நூறு செய்யுட்களும், ஜாலத்திரட்டில் 100 செய்யுள்களும் இவர் எழுதி யவையாகும். இவர் அருளியுள்ள வைத்திய நூல்கள் அநேகம் உள்ளன.

இவர் ஜீவசமாதி பழனியில் உள்ளது.

14. பாம்பாட்டிச் சித்தர்

இவர் கார்த்திகை மாதத்தில் மிருகசீரிடம் விண் மீன் கூடிய நன்னாளில் பிறந்தவர்.

இவர் மருதமலையில் வாழ்ந்தவர். சட்டை முனி வரிடம் தீட்சை இவர் பெற்றதாக வரலாறு உள்ளது.

இவர் மூலாதாரமாகிய பாம்பினைப் பிடித்து ஆட்டியும், தம் சொற்படி நடக்கச் செய்தும், யோகப் பயிற்சி மூலம் எழுப்பி மேலேற்றும் திறம் இருந் ததால் இவர் ''பாம்பாட்டிச் சித்தர்'' என்று அழைக்கப் பட்டார். உருண்டோடி வந்த குன்றினைத் தம் பார்வையால் நிற்கச் செய்தும், கூடுவிட்டு கூடு பாய்ந்தும் பல சித்துக்கள் புரிந்துள்ளார். ''சித்தா ரூடம்'' மற்றும் பல வைத்திய நூல்களை இவர் அருளியுள்ளார்.

''யானை சேனை தேர் பரியாவும் அணியாய்
யமன் வரும்போது துணை ஆமோ அறிவாய்
ஞானஞ்சற்றும் இல்லாத நாய்கட்கு புத்தி
நாடி வரும்படி நீ நின்றாடு பாம்பே''

என்று பாம்பை வைத்து மனிதர்க்கு அறிவுறுத்தி யுள்ளார்.

இவர் சங்கரன் கோயிலில் ஜீவசமாதி கொண் டுள்ளார்.

15. மச்சமுனி

இவர் ஆடிமாதத்தில் ரோகிணி விண்மீன் கூடிய நன்னாளில் பிறந்தவர்.

இவர் போகரின் மாணாக்கர். சிவபெருமான் கடற் கரையில் பார்வதிக்கு தாரக மந்திரம் உபதேசிக்கை யில், மீன் ஒன்றின் வயிற்றிலிருந்து அம்மந்திரம் கேட்டு தோன்றிய படியால் சிவபெருமானால் ''மச்ச முனி'' என்று அழைக்கப்பட்டவர். கோரக்க சித்தரின் குரு மச்சமுனியும் கோரக்கரும் சேர்ந்து ஆற்றிய அற்புதங்கள் பல உள்ளன. திவாகரம் 800, வைத் தியம் 800, வாதநிகண்டு, மச்சமுனி வைப்பு முதலிய நூல்களை இயற்றியுள்ளார். உயரிய செந்தூரம், பற்பம் தயாரிக்கும் முறையைச் சொன்னவர். இவர் ஜீவசமாதி திருப்பரங்குன்றத்தில் உள்ளது.

16. பதஞ்சலி

இவர் வைகாசி மாதத்தில் சதய விண்மீன் கூடிய நன்னாளில் பிறந்தவர்.

அத்திரி முனிவரின் தேவியாகிய அநசூயை யிடம் மகவாய்த் தோன்றி, தில்லைக்கு வந்தவர். இவரை ஆதிசேடனின் அவதாரம் என்று கூறுவர். சிவபிரானது நடனத்தைக் காணும் பொருட்டு பதஞ் சலி முனிவராக அவதரித்தார். தில்லையில் முன்பே வந்து வாழ்ந்திருந்த வியாக்கிரபாதருக்கு உற்ற தோழர் ஆனவர். தில்லை வனத்திலே நடராசரின் ஆனந்த தாண்டவத்தைக் கண்டு மகிழ்ந்தார். யோக முறை களை நன்கு அறிந்தவர். யோக மருத்துவ நூல்களை எழுதியுள்ளார். பாணினி சூத்திரத்திற்கு பாஷ்யம், யோக சூத்திரம் முதலான பல நூல்களை அருளியவர்.

இவர் ஜீவசமாதி எட்டுக்குடியில் உள்ளது.

17. கருவூரார்

இவர் சித்திரை மாதத்தில் அஸ்த விண்மீன் கூடிய நன்னாளில் பிறந்தவர்.

இவர் கருவூரில் தோன்றியவர். போக சித்தரிடம் உபதேசம் பெற்று ஞான நூல்கள் பல ஆராய்ந்து சிவயோகத்தில் நின்றவர். காயகற்பம் உண்டவர். பல சித்துகள் கைவரப் பெற்றவர்.

சித்த மருத்துவத்தைப் பற்றியும் இவர் பல பாடல்கள் பாடியுள்ளார். மழை வராத காலத்தே, இவரது வாக்கால் மழை பொழிந்து வெள்ளம் வந்தது சிவபெருமான் கோயில் திறக்காதபோது கவிபாடித் திறப்பித்துள்ளார்.

சிவத்தல யாத்திரையாக வராககிரி துவங்கி திருக் குருகூர் வரை சென்றார். இறைவன் பாகவதர்கள் கனவில் தோன்றி, கருவூரின் அருள் பெறுக என உத்தரவிட்டதாலும், கருவூரரை வணங்கி வாழ்த்திய மையால் திருக்குருகூரின் கண் வாழும் நாய்களுக் கும் இவர் மோட்சம் அளித்ததாகக் கூறப்படுகின்றது.

பிறகு திருச்செந்தூர் முருகனை வணங்கி, திருநெல் வேலியை அடைந்தார். நெல்லையப்பரை வருக வென அழைக்க, அவர் வராது போகவே ''ஈசன் இங் கில்லாமையால் எருக்கு முளைக்கக் கடவது'' எனச் சபித்தார். இறைவன் அடியவர்களை அழைத்து ''நான் காலம் தாழ்த்தியமையால் கருவூரார் என்னைச் சபித்துச் செல்கிறார். வாருங்கள்! அனைவரும் சென்று அவரைச் சமாதானப்படுத்துவோம் எனக் கூறி விடையேறிச் சென்று கருவூராருக்குக் காட்சி தந்தார்.

திருப்புடை மருதூர் ஆலயம் சென்று வணங்க இறைவன் காட்சி தந்து கரூருக்கு வருக என்றுரைத் தார்.

இராஜராஜன் தஞ்சையில் எடுத்த பெரிய கோயிலின் லிங்கத்திற்கு (பெருவுடையார்க்கு) அட்ட பந்தன மருந்து இளகாததால் கருவூரார் தனது தாம் பூலத்தால் லிங்கத்தை ஸ்தாபனம் செய்தார்.



சிதம்பரம் நடராஜரது உருவச் சிலையும் போகரது ஆணையால் இவரால் செய்யப்பட்டதாகும். இவரது பெருமைகள் அளவிடற்கரியன.

கருவூரார் வாதகாவியம், கருவூரார் பூஜாவிதி, திருமுறையில் திருவிசைப்பா முதலியன இவர் இயற்றிய நூல்களாகும்.

இவர் ஜீவசமாதி கரூரில் உள்ளது. இவர் தைப் பூசத்தன்று ஆனிலையப்பருடன் ஐக்கியமானதாக கூறப்படுகிறது.

18. திருமூலர்

இவர் புரட்டாசி மாதம் அவிட்டம் விண்மீன் கூடிய நன்னாளில் பிறந்தவர்.

திருக்கயிலையில் நந்திதேவர் அருள்பெற்ற சித்தர். பூவுலகில் அகத்தியருடன் வசிக்க எண்ணி ஆகாய மார்க்கமாகப் பறந்து வரும் வழியில் மூலன் என்னும் இடையன், தன் பசுக்களை ஓட்டிக் கொண்டு வரும் வழியில் அரவம் தீண்டி மாண்டுக் கிடந்தான். இதைக் கண்ட அவர் பசுக்களை மகிழ்விக்க வேண்டி கூடுவிட்டு கூடு பாயும் சித்தியால் மூலன் உடலில் புகுந்து திருமூலர் ஆனார்.

"ஒன்றே குலம் ஒருவனே தேவன்'' என்ற உயரிய கருத்தை மொழிந்த பெரும் ஞானி.

"ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்
நன்றே நினைமின் நமனில்லை நாணாமே
சென்றே புகுங்கதி இல்லைநும் சித்தத்து
நின்றே நிலைபெற நீ நினைந்துய்மினே''

தமிழ் ஆகமம் என்று குறிக்கப்பெறும் திருமந்திரம் உள்ளிட்ட பல நூல்களை எழுதிப் பெரும்புகழ் பெற்றவர். திருமூலர் அறுபத்திமூன்று நாயன்மார்களில் ஒருவர். இவர் ஜீவசமாதி சிதம்பரத்தில் உள்ளது.

"சித்தர்கள் வாழி! சிவன் வாழி!
தேவர்கள் வாழி! ரிஷி வாழி!
பத்தர்கள் வாழி! பதம் வாழி!
பார்புகழ் தண்டாயுதபாணி வாழிய வாழியவே!

★★★

தட்சிணாமூர்த்தி

கவிஞர் சொ.பொ. சொக்கலிங்கம்



குருவாக உருவாகிக்
குறையாத ஞானத்தின்,
அருவமாய்த் தியானத்தில்,
அழியாத நிலையாகக்
கருவாகிப் பிரபஞ்சக்
காலத்தைப் பிறப்பதனை
தருமவழி கடைத்தேற்றும்
தட்சிணா மூர்த்தி நீயே, (1)

ஒருகாலை ஊன்றி,
மறுகாலை மடக்கி,
இருந்தநிலை அமர்ந்து,
இடவலக் கையமர்த்தி,
திருமேனி நிமிர்ந்து,
திருக்கண்கள் தியானத்தின்,
அருந்தவ நிலையில்
அமர்ந்த மூர்த்தி நீயே, (2)

மூடிய கண்களும்,
முதிர்ந்த மௌனமும்,
கூடிய தியானமும்,
குவிந்திடும் முகமும்,
ஆடிய பாதங்கள்
அமர்ந்திடும் நிலையும்,
தேடிய ஞானமும்,
தெவிட்டாத நிலையில், (3)

ஆலமர் செல்வன்,
அமர்ந்த திருக்கோலம்,
மூலமாய் முதலாய்,
முடிவிலா ஒன்றாய்,
ஞாலமெலாம் செழிக்க,
ஞானமழை பொழியும்,
மூலபல மழுவோடு
முக்திதரும் மூர்த்தி நீயே (4)

தனிக்கோயில் ஏதுமின்றி,
சங்கரனின் கோயில்களில்,
தனிமையிலே தவக்கோலம்,
தந்தளிக்கும் மூர்த்தி நீயே
மனிதரினம் யோகஞான
மாட்சிபெறும் தத்துவத்தின்
புனித நிலை போதிக்கும்,
புகழார்ந்த குருவும் நீயே. (5)

(முற்றும்)

திருத்தணிகை திருமுருகர் திருக்கவசம்

(நேரிசை வெண்பா)

இயற்றியவர் : கவிஞர் முருகுவண்ணன்

1. நம்பும் அடியவரை ஆண்டருளும் நற்றணிகைப்
பெம்மான் முருகப் பெருமானை - எம்மானைப்
பாடி அணிகவசம் பாடிடவே தாய்த்தமிழே
பாடிப் பணிந்தேன் அருள்.

2. அன்னையாய் - தந்தை யாகி
அனைவரும் அனைத்து மாகி
தன்னைநேர் இறையு மான
தணிகைமா முருகா! ஐயா!
என்னையுன் தொண்டு செய்ய
இசைந்ததென் பிறவிப் பேறே!
உன்முனம் கவசம் பாடி
ஒருசில சொல்ல லாமோ?

3. ஆருயிர் மெய்யா யோங்கும்
அனைத்துமே வல்ல ஒன்றே!
யாருமே நின்தாள் பற்றி
எனக்காக வேண்டி லாரே!
பேரரி தான மாந்தர்ப்
பிறவியைத் தந்தாய்; பெற்றேன்!
சீருயர் தணிகைத் தேவே
திருவுளம் கொண்ட தாலோ?

4. ''இன்றுநேற் றல்ல என்றோ
செய்தஎன் வினைக ளாலே,
என்னுடல் உயிர்வந் துற்ற
பிணிஎலாம் தீர்த்து காக்க,
அன்பிறை முருகா! உன்கை
வேலினை அனுப்பென் றுன்னை
என்றுமே வேண்டேன்; கேளேன்;
என்னுளும் குடிகொண் டோனே!

5. 'ஈகைசெய்' என்றே ஈர்கை
'இருகை'யை இறைவன் ஈந்தான்;
''ஈகைநம் உயிர்க்கும் நல்ல
ஊதியம்; புகழ்சேர் வாழ்வாம்;
ஈகையால் இலாரும் வாழ்வார்;''
எனினுமொன் றியார்! ஈரா(று)
ஈகையா! முருகா! 'ஈயார்'
'ஈவ'ராய் மாற்றீ வாயே!

6. உலகினர் பகை - போர் இன்றி,
ஒன்றுபட் டிசைந்து வாழ;
இலர்பலர் ஆகா வண்ணம்
நோற்பராய் எலாரும் ஆக;
உலகெலாம் போற்றும் எங்கள்
உயிர்மெயே! இல்லார் - நல்லார்
நலவள வாழ்வும் காண
நயந்தருள் முருகா! இன்றே!

7. 'ஊழதன் கையில் - பாவை
உலகமே' என்றால், யானோ
ஊழையுப் பக்கம் காண்பேன்?
உல்கவர லாறோ(டு) இன்றும்
வாழும்பல் காப்பி யங்கள்
வழங்குமே ஊழ்க்குச் சான்றே!
ஊழிடம் முருகா! சொல்லாய்
உன்பதம் பெறுவேன் யானே!

8. எண்குணா! முருகா! உன்னால்
எழுமையும் கடந்து வந்தேன்;
பண்பட - பக்தி கொண்டுன்
பதம்பெற உயர்மான் ஆனேன்;
கண்ணொடு கருத்துள் ஓங்கும்
கடவுள்உன் காட்சி கண்டு
விண்டிட வறியேன்; உன்பால்
உய்வலால் வேண்டேன் வேறே!

9. 'ஏழெ'னும் எண்நற் பேறாம்!
இசையொடு வண்ணம்; நாளும்
ஏழுதான் பிறப்பும் ஏழ்போல்!
மூவிரு படைவீட் டான்நீ,
வாழும்என் நெஞ்சும் சேர்த்தால்
வரும்விடை, படைவீ டேழாம்!
ஏழினி படைவீ டாக
ஏற்றெனுள் முருகா! வாழி!

10. 'ஐ'யெனல் தமிழில் ஒன்பான்
உயிர்; நெடில்; அதனை இந்நாள்,
'ஐ'யினுக்(கு) எழுத்துப் போலி
எனவரும் 'அய்'யைக் கொண்டே

'ஐ'யென எழுது வார்போல்
அடியனேன் போலி அல்லேன்;
மெய்யனேன்! முருகா! வாழ்த்தி
அருளுக எம்மெய் வாழ்வே!

11. ''ஒழுக்கமே உயிராய்; அன்பு
வாழ்க்கையே உடலாய்க் கொண்டோர்,
அழைத்திடா முனமே தெய்வம்
வந்தருள் செய்யும்'' என்னும்
மொழிக்கொரு சான்றாய் வாழ
முடியுமோர் முடியா தோவுன்
தொழும்பருக் கருள்செய் வாயே
தூமணி முருக வேளே!

12. 'ஓம்' எனும் ஒளியே! மூல
மந்திர ஒலியே! ஓங்கும்
'ஓம்'எனும் தமிழ்ச்செஞ் சொல்லே!
எட்டிரண் டொடு மகார
'ஓம்'எனும் ஆதி அந்தம்
இலாதமெய்ப் பொருளே! ஒன்றே!
''ஓம் முரு கா'' என் றோதி
உணர்பவர்க் கருள்செய் அன்பே!

13. ஔடதம் - முருகா! - நீதான்
வினை-பிணி அறுக்க வல்லான்!
செவ்வாய்; வி சாகா; சஷ்டி;
கிருத்திகைச் சேயே! கேள்வாய்!
செவ்வியல் தமிழ்ப்பா மாலை
சீரொடு தொடுத்து வந்தேன்;
எவ்வித மேனும் ஏற்றே
இசைந்தருள் புரிக ஐயே.

14. கருணையால் அன்பால் எம்மைக்
காக்குமெய்க் கடவு ளான
திருத்தணி முருகா! கந்தா!
சிவசக்தி மைந்தா! ஆறு
திருமுகம் கொண்டுன தொண்டா
தமக்கருள் செய்யும் வண்ணம்
ஒருதிருக் கவசம் ஆம்; இக்
கவிதைநூல் உவந்தே லாயே!

15. 'ங்'ப்போல் வளைஎன் றாளஎங்
ஞனம்மெல் இனமாம் ஔவை?
நுட்பமோ அன்பு வாழ்க்கை
நுணுக்கம்என் றுவப்பேன்! அம்மை
அப்பனே! முருகா! 'ங்'ப்போல்,
உன்அடி யவர்எல் லார்க்கும்,
ஒப்பரும் அன்பு வாழ்க்கை
உவந்தருள் உய்யு மாறே!

16. சரவண பவனே! ஆறு
மந்திரத் தமிழ்எ முத்தே!
சரவண பவனே! ஆறு
சமயசம் பந்தம் கொண்ட
சரவண பவனே! சுப்ர -
மணியனே! குகனே! தெய்வப்
பெரியனே! முருகா! உன்பேர்
எண்ணில! இன்பப் பேறே!

17. ஞமலியாம் - ஞான வானேழ்
வண்ணமா மயில்மேல் ஏறி,
எமதுளம் ஒளிது லங்க
எழுங்கதிர் போன்று வாராய்!
எமக்கினி முருகா! உன்னைத்
தவிர்த்திலை இறைவன்; முக்கண்
குமர! ஓம் குருபரா! எம்
குடிமுழு தாளும் கோவே.

18. 'இடவல மருங்கில் கொண்டாய்
இருவரை முருகா! காண்பார்
''மடக்குற மான்-தே வானை''
மாண்புற வணங்கிச் செல்வர்!
அடியனேன் உணர்வேன், சக்தி
இருவராம் - அருளாம்; அன்பாம்!
மடமெனை மன்னித் தன்பால்
அருள்கஇன் பமைதி வாழ்வே!

19. கணந்தோறும் பாவம் ஐந்தின்
பெருக்கமும்; கயமை வீசும்;
பணம்செய்ஆட் கொல்லித் தாக்கும்;
பயங்கர வாதத் தீய்ப்பும்;
குணம்குறை மக்கள் ஆட்சிக்
கொடுமை; நஞ்சான யாவும்
கணத்தினில் தீர்த்து வையக்
கவலைதீர் கந்த வேலே!

20. ''தமிழ்மொழித் தாயே! ஊழி
பலபல கண்ட தாயே!
தமிழேளம் கண்ணே! எண்ணே!
எழுத்தே! 'சித்'தெண்தா'' என்றேன்;
'தமிழ்க்கருள் கடவுள் என்றால்
தணிகைமா முருகன்' என்று
தமிழ்எனக் குணர்த்தல் கூட
தழைத்தெனுள் உளன்நீ தானே!

21. நகரமே! சிவன்மால் நாம -
மந்திர முதலே! காலம்
நகர்ந்திட வரும்போம் நாளில்;
ஆணவ 'நான்'இல்; எண்ணில்

தொகைமொழி ஒலிப்பில்; ஆறு
சுவைப்பிலும் முதற்கண 'நா'வே!
அகம்புறம் காக்கமுன் நின்(று)
அருள்முரு கா! 'நா'வேளே!

22. பத்தியால் யானுன் பாதம்
பாடியே பரவ வேண்டும்,
முத்தமிழ் தருக; உன்பேர்
முழக்குவேன் உலக மெங்கும்!
பித்தராய் அடிய ராகிப்
பெருகுவர் பக்தர் கோடி!
வித்தகா! என்விண் ணப்பம்
ஏற்றருள் தணிகை வேந்தே!

23. 'மனம்'எனும் மாயை மைந்தே!
மன்னும்என் ஊழ்கை யாளே!
உனைவயப் படுத்த வல்லேன்'
வாழ்வாங்கு யானவாழ்ந் துய்ய,
தனைநிகர் முருகன் பாதம்
சார்ந்திட இசைக; இன்றேல்
உனையினி இசைய வைக்கும்
என்துணை வீர வேலே!

24. யகரமும் வகரம் போன்றே
உடம்பு - அடும் மெய்யாம்! அம்மெய்
யகரம், நின் கைவேல்; தோகை;
சேவலாய்க் காட்டும் மும்மை
வகைகளில், மூன்றெ முத்தில்
வடிவுறும் முருகா! உன்னை
தொகைத்தொகை யாக வந்து
தொழுபவர்க் கருள்க ஐயே!

25. அரங்கமாம் உலகம்; காணும்
நாடகம் வாழ்க்கை; ஒன்பான்
அருஞ்சுவை, நடிகர் எங்கள்
அகம்புற விளக்கம்; மாறும்
திரையெழில் காட்சி, வாழ்க்கைத்
திருப்பமாம்; உரை, பண, பாட்டும்
உருவகம் பிறவும் நீதான் -
முருகளம் உயிர்மெய்க் கூத்தே!

26. ''இலன்-உளன் கடவுள்'' என்னும்
இருமனம் கொண்டார் கூட
''உளன் - அவன் முருகன்'' என்றே
உடன்திருத் தணிகை வந்தே,
உளமார, ''முருகா'' என்றுன்
ஒளிஒலிக் காட்சி காண்பார்
அளவிலா தருளும் மாட்சி
அற்புதம் சொலவல லேனோ!

27. வரவொடு செலவும்; போக்கு
வரத்தொடு வாழ்வும்; நாளும்
இரவொடு பகலும்; வாய்க்கும்
இன்பொடு துன்பும் உன்றன்
அருளினால் சமமாய் ஏற்றே
இல்லறம் ஆற்றி னாலும்
திருத்தணி முருகா! யானுன்
திருவடி காணல் வேண்டும்!

28. அழகு நீ! தமிழ்மொ ழிக்கண்
'ழ'கரம் நீ! புதுமை பூத்த
பழமை நீ! அருள்ப முக்க
தழைத்தகற் பகமநீ! அன்பே
தொழும்தமிழ்க் கடவுள் சேயே!
தூயனே! முருகா! வாராய்;
பழுதிலா வாழ்வு தாராய் -
உனைப்பணி தொழும்பர்க்(கு) இன்றே!

29. இளங்கதிர் உதிக்க; வையம்
விழிக்க, 'கொக் கரக்கோ' என்று
கிளர்ந்துகூ வும்செஞ் சேவல்;
கொஞ்ச பைங் கிளியும்; வண்ணம்
ஒளிர்மயி லோடு வேலும்,
முருகா! யாம் குழல்யா ழோடு
வளர்தமிழ்க் கவிதை பாட
மயங்கிளம் துணையாம் காணே!

30. நிறம்; இனம்; மொழி; பால்; எல்லை;
மதம்; நிதி; பேதம் காணா
நிறைமன பக்தர் முன்னே
நேரில்வந் தருள்நீ, யாப்பின்
முறையினில் நிரைநேர் ஆவாய்!
முதிர்ந்தமெய் பக்தர் நெஞ்சில்
உறைதிரு முருகா! மாந்தர்
உனைஅறிந் தேற்ப தென்றோ?

31. எனதுளம் தேடி வந்தாய்;
'யான்' 'என' தகற்றி வாழ,
தனித்தமிழ்க் கவசம் தந்தாய்
தணிகைமா முருகா! பெற்றேன்;
மனத்தணி யான்; என் பெற்றோர்;
தமர்; துணை; மக்கள்; சுற்றம்;
உனைநினை உயிர்கட் கெல்லாம்
வாழ்ந்துய அருள்தந் தாயே!

★★★

ஆரூர் திருக்கோயிலும் பதினெண் இசைக் கருவிகளும்

- எம். விஜயரங்கதுரை, எம்.ஏ., எம்.எல்., பி.ஜி.டி.பி.எம்.,
உதவி ஆணையர்,
இந்துசமய அறநிலைய ஆட்சித்துறை, உலோகத் திருமேனிகள் பாதுகாப்பு மையம், திருவாரூர்.

(சென்ற இதழ் தொடர்ச்சி)

3. சுத்த மத்தளம்

ஆரூர் பதினெண் இசைக் கருவிகள் சுத்த மத்தளம் ஒரு அரிய இசைக் கருவியாகும். இது மாட்டுத் தோலினாலானது.

இவ்விசைக் கருவி, ஏனைய மத்தள இசைக் கருவிகளைக் காட்டிலும் மிக நீளமுடையதாகவும் பருமனாகவும், உள்ளது. குடமுழவம் (பஞ்ச முகவாத்தியம்) இசைக்கப்படாத நேரங்களில், இவ்விசைக் கருவி இசைக்கப்படுகிறது. திருவந்திக் காப்பு என்கிற மாலை நேர வழிபாட்டிலும், ஏனைய தீபாராதனை காலங்களில் சுத்த மத்தளம் இசைக்கப்படுகிறது. (குடமுழவம் இசைக்கப்படாத நேரங்களில்) இவ்வரிய இசைக் கருவியை பாரசைவர் மரபில் வந்த ''முட்டுக்காரர்'' என்ற இசைக் கலைஞர்கள் இசைப்பார்கள். குறிப்பாக, திங்கள், வெள்ளி நாட்கள் தவிர மற்ற நாட்களில் பஞ்ச முக வாத்தியத்திற்கு பதிலாக ஆரூர் கோயிலில், சுத்த மத்தளம் இசைக் கருவியே இசைக்கப்படும். இதன் தனிச் சிறப்பு என்னவென்றால், ஆரூர் திருக்கோயிலில், ஸ்ரீ சந்திரசேகரர் திருவிழாக் காலங்களில் சுவாமி ஆரூர் கோயில் முதல் பிரஹாரத்தில் ''ஈசான திசையில்'' ''பூத நிருத்தம்'' என்ற நிகழ்ச்சி நடைபெறும் பொழுது ''முட்டுக்காரர்'', எனப்படும் இசைக் கலைஞர், தன் தலைமீது சுத்த மத்தளம் என்கிற இவ்வரிய இசைக் கருவியை வைத்துக் கொண்டு இசைப்பார். இது ஆரூர் திருக்கோயிலின் தனி சிறப்பாகும்.

4. எக்காளம்

எக்காளம் என்னும் இசைக் கருவி செம்பு உலோகத்தினால் ஆன கஞ்சக் கருவியாகும். இது ஒரு நீண்ட குழாய் வடிவ அமைப்பில் காணப்படுகிறது. நுனிப்பாகத்தில் புனல் போன்ற அமைப்பு உள்ளது. சுமார் ஐந்து அடி நீளம் வரை உள்ள இவ்விசைக் கருவி, இரண்டு பாகங்களை கொண்டுள்ளது. ஒரு பாகம் இரண்டரை அடி மற்றொரு பாகம் இரண்டரை அடியாகும். இரண்டும் மத்தியில் இணைக்கப்பட்டுள்ளது. வாயில் வைத்து ஊதும் பகுதியில், சுமார் ஒரு செ.மீ. வரை சுற்றளவு உள்ளது. ஏனைய குழாய் பகுதியில் சுமார் மூன்றரை சென்டிமீட்டர் வரை விட்டம் உள்ளது. இவ்விசைக் கருவி சுமார் இரண்டு கிலோ வரை எடை உள்ளது. இவ்விசைக் கருவி, இசைக்கப்படும் பொழுது இசைக்கும் இசைக் கலைஞர், மார்பு பகுதியில் ஒரு மரக்கட்டை உதவியுடன் இவ்விசைக் கருவியை வைத்துக் கொண்டு அன்னார்ந்த நிலையில் மேல் நோக்கி இசைக்க வேண்டும். ஆரூர் திருக்கோயிலில் சாயரட்க்ஷை வேளையில், எக்காளம் இசைக்கப்படுகிறது. அப்போது ''ஓம்'' என்ற பிரணவ ஒலி எங்கும் கேட்கப்படுவதாகக் கூறப்படுகிறது. சுமார் நான்கு பேர் வரை இந்த இசைக் கருவியை ஒலித்ததாகக் கூறப்படுகிறது. ஆரூரில் சுவாமி புறப்பாட்டில் எக்காளம் சுத்த மத்தளத்துடன் சுவாமி புறப்பாட்டில் (அஜபா நடனத்தில்) இரவு நேரத்தில் சேர்ந்து ஒலிக்கும் பொழுது திருவாரூர் அருகாமையில் உள்ள (சுமார் இரண்டு மைல் தூரம்) எக்காள ஒலி கேட்கப்படுவதாகக் கூறப்படுகிறது. ஆரூர் திருக்கோயில் பாலாலயம் செய்யப்படும் போதும் இவ்விசைக் கருவி பூஜை, விழாக் காலங்களிலும் இசைக்கப்படுகிறது என்று கூறப்படுகிறது.

5. திருச்சின்னம்

இவ்விசைக் கருவி, எக்காளத்தைப் போன்று குழாய் வடிவ அமைப்பில் உள்ளது. இது பித்தளை உலோகத்தினால் ஆனது. இதுவும் ஒரு கஞ்சக்கருவி

யாகும். இவ்விசைக் கருவியில் வாயில் வைத்து ஊதும் பகுதி (வாசிக்கும் பகுதி) மட்டும் சுமார் ஒன்றரை சென்டிமீட்டர் வரை நீளம் உள்ளது. **திருச்சின்னம் மொத்தம் (80 சென்டிமீட்டர்) என்பது சென்டிமீட்டர் வரை நீளம் உள்ளது.** இதன் மேல் பகுதி ஒரு புனல் வடிவ அமைப்பை பெற்றுள்ளது.

திருவாரூர் திருக்கோயிலில் சாயரட்கைஷ வழிபாட்டில் ஸ்ரீ தியாகராஜருக்கு நிவேதனம் செய்யப் படும் பொழுது, பாரிநாயனம் மற்றும் திருச்சின்னம் ஆகிய இசைக் கருவிகள் இசைக்கப்படுகின்றன. ஸ்ரீ தியாகராஜருக்கு (அஜபா நடனத்தில்) இவ்விசைக் கருவி இசைக்கப்படுகிறது. ஆரூர் திருக்கோயில் பாலாலயம் செய்யப்படும் பொழுதும் திருச்சின்னம் இசைக்கப்படுகிறது. ஆரூர் திருக்கோயில் கும்பாபிஷேகம் மற்றும் மண்டலாபிஷேகம் காலங்களில் திருச்சின்னம் இசைக்கப்படுகிறது. **இத் திருச்சின்னம் என்ற இசைக் கருவி, ஆரூர் திருக்கோயிலின் மற்றுமொரு அரிய இசைக் கருவி ஆகும்.** இன்றும், ஆரூர் திருக்கோயிலில் திருச்சின்னம் இசை மரபுபடி இசைக் கப்பட்டு வருகிறது.

6. கொடு கொட்டி அல்லது கிடு கிட்டி

ஆரூர் தந்த பதினெண் இசைக் கருவிகளுள் **கொடுகொட்டி ஒரு அரிய இசைக் கருவியாகும்.** இது ஒரு புதுமையான இசைக் கருவியாகும். இவ்விசைக் கருவி மாட்டுத் தோலாலான ஒரு தோல் கருவியாகும். தோற்றத்தில் இரண்டு மர சட்டிகளை இணைத்தாற் போன்று அமைக்கப்பட்டு, மாட்டுத் தோலினாலான கயிறுகளால் (வார்) இணைக்கப்பட்டுள்ளது. சுமார் ஒரு (1 அடி) வரை உயரம் உள்ளது. கொடு கொட்டியில் இரண்டு பாகங்களில் ஒவ்வொன்றின் சுற்றளவும் சுமார் முக்கால் அடி வரை உள்ளது. இரண்டு மரக் கம்புகளைக் கொண்டு கொடு கொட்டி இசைக்கப்படுகிறது. **கொடு கொட்டி ஆரூர் திருக்கோயில் ஆழித் தேரோட்டத்தில் பாரி நாயனம், என்ற இசைக் கருவியுடன் இசைக்கப்படுகிறது.** ஆரூர் திருக்கோயிலில் கும்பாபிஷேகம் போன்ற நிகழ்ச்சிகளில் இவ்விசைக் கருவி இசைக்கப்படுகிறது.

7. சங்கு வாத்தியம்

சங்கு வாத்தியம், திருவாரூர் இசை மரபில் ஒரு முக்கியமான சிறப்பு அம்சமாகும். இது ஒரு காற்றுக் கருவியாகும். இது மற்ற வெண் சங்குகளை போலவே வெண்மையான நிறத்தில் அமைக்கப்பட்டுள்ளது. இதன் நீளம், சுமார் அரை அடி (½ அடி) வரை நீளம் உள்ளது. வாயில் வைத்து ஊதும் பகுதி பித்தளை உலோகத்தினால் செய்யப்பட்டுள்ளது. இதன் சுற்றளவு சுமார் 12 செ.மீ. வரை உள்ளது. இதன் எடை, சுமார் 1 கிலோ வரை உள்ளது. சங்கு வாத்தியம் இசைக்கருவியின் முன்பகுதியில் (முனைப்பகுதி) மயில் வடிவம் போன்ற அமைப்பில் வெள்ளி உலோகத்தினால் ஆன உருவம் அமைக்கப்பட்டுள்ளது. இச்சங்கு வாத்தியம் என்ற இசைக்கருவி ஆரூர் திருக்கோயிலில் சாயரட்கைஷ வழிபாட்டிலும், சுவாமி புறப்பாட்டிலும் திருப்பள்ளி எழுச்சி காலங்களிலும் அர்த்தஜாம வழிபாட்டிலும் இசைக்கப்படுகிறது.

8. நட்டுவதாளம்

நட்டுவதாளம், ஆரூர் தந்த பதினெட்டு இசைக் கருவிகளில் ஒன்றாகும். இது வெண்கலத்துடன் இரும்பு உலோகம் கலந்த கஞ்சக் கருவி ஆகும். மேல் பகுதி வெண்கல உலோகத்தினாலும் அடிப்பகுதி இரும்பினாலும் ஆனது. இவ்விசைக் கருவி ஒரு தட்டு போன்ற அமைப்புடன் சுமார் அரை சென்டி மீட்டர் வரை சுற்றளவும் சுமார் அரை கிலோ வரை எடை கொண்டதாகும். திருவாரூர் திருக்கோயிலில் நடைபெறும் **திருவிழா நிகழ்ச்சிகளில்,** இவ்விசைக் கருவி இசைக்கப்பெற்றது. பாலாலயம் மற்றும் கும்பாபிஷேக நிகழ்ச்சிகளிலும் இவ்விசைக் கருவி இசைக் கப்படுகிறது. இவ்விசைக்கருவியும் **திருவாரூர் திருக் கோயில் இசை மரபில் குறிப்பிடத்தக்க அம்சமாகும்.**

9. பேரிகை அல்லது முரசு

ஆரூர் திருக்கோயில் இசை மரபு கண்ட அரிய இசைக்கருவிகளில் பேரிகை ஒன்றாகும் இவ்விசைக் கருவி, இரும்பு உலோகத்தினால் ஆனது. வாய்ப் பகுதியில் மாட்டுத்தோல் கொண்டு மூடப்பட்டுள்ளது. இவ்விசைக் கருவியை சுற்றிலும் தோலினால் ஆன வார்களைக் கொண்டு கட்டப்பட்டுள்ளது. இதன் உயரம் சுமார் மூன்றடி வரை உள்ளது. சுமார் இரண்டே முக்கால் அடி வரை சுற்றளவு உள்ளது. இவ்விசைக் கருவி தோற்றத்தில், ஒரு அரை தேங்காய் மூடி போன்று அரை வட்ட வடிவத்தில் காணப்படுகிறது. இதன் அடிப்பகுதி, குவிந்தும் மேல்பாகம் அகன்றும் காணப்படுகிறது. இரண்டு மரப்பிரம்புகளை கொண்டு அடித்து ஒலி எழுப்பக்கூடியது. மற்றதோல் கருவிகளை காட்டிலும் அதிக அளவில்

1. பாரிநாதசுரம்



2. பஞ்சமுக வாத்தியம் (குடமுழவம்)



3. சுத்த மத்தளம்



4. எக்காளம்

ஒலி எழுப்பக்கூடியது. இவ்விசைக் கருவி, சாய ரட்கைஷ வழிபாட்டிலும் உச்சி காலத்திலும் இசைக் கப்பட்டு வரப்பெற்றுள்ளது என்று கூறப்படுகிறது. திருவாரூர் திருக்கோயில் நீலோத்பலாம்பாள் சன்னதி யில், உச்சி வேளையில் இசைக்கப்பட்டு வந்ததாகக் கூறப்படுகிறது.

10. கர்ணா

ஆரூர் திருக்கோயில் இசை மரபு தந்த மற்று மொரு இசைக் கருவி கர்ணா. இது ஒரு அரிய இசைக்கருவியாகும். இவ்விசைக் கருவி செம்பு உலோகத்தினால் ஆன ஒரு கஞ்சக் கருவியாகும். இது ஒரு நீண்ட குழாய் வடிவ அமைப்பை கொண்டுள்ளது. இதன்மேல் பாகம் புனல் போன்ற அமைப்பை பெற்றுள்ளது. இவ்விசைக் கருவி இரண்டு பகுதிகளாக செய்யப்பட்டு ஒன்றாக இணைக்கப்பட்டுள்ளது. வாயில் வைத்து ஊதும் பகுதி, சுமார் 2 சென்டி மீட்டர் சுற்றளவு உள்ளது. நடுப்பாகம் சுமார் நான்கரை சென்டி மீட்டர் சுற்றளவு கொண்டுள்ளது. முன்பகுதி (முனைப் பகுதி) சுமார் 9 சென்டி மீட்டர் சுற்றளவு கொண் டுள்ளது. மேல்பகுதி பெரிதாக அகன்று உள்ளது. ஆரூர் திருக்கோயில் முதல் பிரகாரத்தில் இவ்விசைக் கருவி இசைக்கப்படுகிறது. முக்கியமாக, ஆரூர் திருக் கோயில் திருவிழாக் காலங்களில் கர்ணா இசைக்கப் படுகிறது. இவ்விசைக் கருவி ஒலிக்கும் போது தியாகா, தியாகா, என்ற ஒலி எழுப்பப்படுவதாக கூறப்படு கிறது. இவ்விசைக் கருவி திருவாரூர் திருக்கோயில் இசை மரபில் குறிப்பிடத்தக்க ஒரு அரிய இசைக் கருவியாகும்.

(அடுத்த இதழில் நிறைவு பெறும்)

* * *

முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும்

(நீதிக்கதை)

மாண்டவ்யர் என்ற ஒரு மகரிஷி இருந்து வந்தார். இவர் சத்யம் தர்மம் ஆகியவற்றைச் சிறிதும் தவறாது பேணிக் காத்து வாழ்ந்து வந்தார். ஒரு சமயம் அவர் தன் ஆசிரமத்திற்கு எதிரில் ஒரு மரத்தின் கீழ் தலை கீழாக இருந்து தவஞ் செய்து கொண்டிருந்தார்.

திருடிய செல்வத்துடன் கள்வர் சிலர் அவ்வழியே ஓடி வந்தனர். காவலர்கள் துரத்தினர். மூட்டை களுடன் ஓட முடியாமல் கள்வர்கள் முனிவரின் ஆசிரமத்தில் போட்டுவிட்டு ஓடிவிட்டனர்.

காவலர்கள் ஆசிரமத்தில் செல்வங்களைக் கண்ட னர். முனிவரைப் பார்த்து ''திருடர்கள் எங்கே?'' என்ற னர். தவத்திலிருந்த முனிவர் பதில் பேசவில்லை. கோபங்கொண்ட காவலர்கள் மேலும் ஓடிச் சென்று திருடர்களைப் பிடித்தனர். மன்னன் முன் நிறுத்தினர்.

பதில் சொல்லாமையால், முனிவரைப் பற்றி உணராத காவலர்கள் அவரையும் கொண்டு போய்க் குற்றஞ்சாட்டி நிறுத்தினார்கள்.

மன்னன் அனைவருக்கும் மரண தண்டனை விதித்தான். அனைவரையும் காவலர்கள் கழுவில் ஏற்றினர். திருடர்கள் இறந்தனர். ஆனால் மாண்டவ்ய மகரிஷி மட்டும் அக்கழுவின் மீது தன் தவவலிமை யால் உணவும் நீருமின்றி நெடுநாள் உயிருடன் இருந்து வந்தார். நாடொறும் மற்ற முனிவர்கள் பறவைகள் உருவில் வந்து மாண்டவ்யருடன் உரை யாடினர்.

செய்தியறிந்த மன்னன் மனங் கலங்கினான். ஓடி வந்தான். மகரிஷியின் அருகில் வீழ்ந்து வணங்கி னான். பிழை பொறுத்தருள வேண்டிப் புலம்பினான்.

மன்னன் ஆட்கள் அவரைக் கழுவிலிருந்து பிரிக்க முயன்றனர். முடியவில்லை. மாண்டவ்யரே தன் தவ வலிமையால் அக்கழுவின் முனையை உடலில் வைத்துக் கொண்டு எஞ்சிய பகுதியை ஒடித்து வெட்டியெறிந்தார். கழுவின் முனையான ஆணி மட்டும் உடலிலிருந்து வந்தமையால் அவர் அன்று முதல் 'ஆணி மாண்டவ்யர்' என்றழைக்கப் பட்டார்.

ஒரு சமயம் ஆணி மாண்டவ்யர் எமலோகம் சென்றார். அங்கு எமனைச் சந்தித்து, ''நினைவு தெரிந்து நான் எப்பிழையும் செய்யவில்லை எனக்கு இத்தண்டனை எதனால் வந்தது?'' என்று கேட்டார்.

அவன் சொன்ன பதில் இதுதான். ''முனிவரே! நீங்கள் பிள்ளைப் பருவத்தில் தும்பிகளைப் பிடித்து அவற்றின் உடலில் முள்களைக் குத்தி விளையாடி மகிழ்ந்தீர்கள், அதன் விளைவே உங்கட்கு இந்நிலை ஏற்பட்டது.''

நாம் ஒருயிருக்கு ஒரு கால் துன்பம் செய்தால் அத் துன்பம் விடாது பற்றி வந்து நமக்கு ஒரு காலத்தில் துன்பத்தைத் தரும். ''முற்பகல் செய்யின் பிற்பகல் தானே விளையும்.''

(அறநிலைய ஆட்சித்துறை வெளியீடான ''மாண வர்களுக்கு நீதிபோதனை'' நூலிலிருந்து)

★★★

"பெண்ணுக்குள் ஞானத்தை வைத்தான்...."

- முனைவர் இரா. செல்வகணபதி

'பெண்' என்ற சொல்லுக்குப்பேணும் தன்மை கொண்டவள் என்பது பொருள். கணவன் குழந்தைகள் மூத்தோரை எல்லாம், அன்பால் அரவணைக்கும் நிலை, மனைவி என்ற நிலையிலேயே பெரிதும் சிறக்கும்.

பழைய தமிழ் நூல்களாகிய சங்க நூல்களில், பெண் என்ற சொல்லுக்கு, மனைவி என்றே பொருள் கொள்ளப்பட வேண்டும் என்ற நிலை உள்ளது. 'பெண் ஈற்று உற்றென', 'சோர்விலாள் பெண்', 'பெண்ணின் பெருந்தக்க யாவுள?' என்ற தொடர்கள் இதனை உறுதி செய்கின்றன.

சமூகத்தில் நிகழும் தவறுகளையும், அநீதிகளையும் நீக்கும் பொறுப்பில், தமிழ்நாட்டில் சமயங்கள் பெரும் பங்காற்றியுள்ளன பெண்மையை உரிமை உடையது ஆக்கவும், ஆணுக்கு நிகராக மேம்படுத்தவும், சைவ சமயம் மௌனப் போராட்டங்கள் நிகழ்த்தியுள்ளதைப் பெரிய புராணப் பதிவுகள் எடுத்துக் காட்டுகின்றன.

வைதிக சமயங்களில், பெண்களுக்கு எந்த நிலையிலும், துறவு நெறி ஏற்க வற்புறுத்தப் பெறவில்லை. திலகவதியார் மனைத்தவம் புரிந்தார் என்றே சேக்கிழார் பதிவு செய்கிறார். காரைக்கால் அம்மையார், பேய் வடிவம் வேண்டிப் பெற்று, ஒரு சிவன் அடியவராகவே கயிலை சேர்கிறார்.

பெண், பெண்ணாக வாழ்வதே ஒரு துறவு நிலை! தனியாக அவளுக்கு ஒரு துறவு நிலை வேண்டா என்பது சைவப் பெருமிதம். தன்னலம், தனக்காக வாழ்தல் என்பது மனைவி நிலையில் பெரும்பாலான பெண்களிடமும் இல்லையே.

மீனாட்சி சுந்தரேசுவரர், அருள்மிகு கற்பகாம்பாள் உடன் அமர் கபாலீச்சரத்தான், அபயாம்பிகை உடனமர் மயூரநாதர் என்ற சைவ வழக்குகள், பெண்ணை உரிமை சான்ற நிலைக்கு எடுத்துச் செல்லும் சைவப் பதிவுகள்.

'பெண்ணின் நல்லாளொடும் பெருந்தகை இருந்ததே', என்பது மதுரையில் சீகாழியை நினைந்து பாடிய ஞானசம்பந்தர் வாக்கு.

பெண்மையை மெலெடுத்து நிறுத்தும் முயற்சியில், சேக்கிழார் தனிக்கவனம் செலுத்துகிறார். அவர் பதிவுகள், சைவம், பெண்மைக்குச் சூட்டிய கிரீடங்கள்.

மற்றைய எல்லாத் தமிழ் இலக்கியங்களும் பெண்ணை அவள். இவள், வந்தாள், பிறந்தாள் என்று 'ள'கர விகுதி போட்டு எழுதிய காலத்தில், பெரிய புராணத்தில், எல்லாவிடத்தும், பெண் பலர்பால் விகுதியில், திலகவதியார் என்றும், திருவனைய திலகவதியார் பிறந்தார் என்றும், தென்னவன் பெருந்தேவி... கமலங்களில் பொருந்த முன் விழுந்தார் என்றும், மங்கையர்க்குத் தனியரசி எங்கள் தெய்வம் என்றும், சிறந்து நிற்றலை நாம் காண முடிகிறது.

உலகத்தார் பார்வையில், வாழ்வு இழந்தவர் போல் காணப்படும் திலகவதியார், திருவதிகையில், தம்முன் வணங்கிய தருமசேனராகிய தம் தம்பிக்குத் திருவாளன் திருநீற்றை ஐந்தெழுத்து ஓதிக் கொடுத்து, சிவாயலத்துள் இட்டுச் சென்றார் என்றால் தீட்சை செய்து, தாய் மதத்திற்கு ஏற்கும் உரிமை, ஓர் ஆதின குருமகா சந்நிதானத்துக்கு நிகராக ஒரு பண்பாட்டுப் பெண்மைக்கு வழங்கப்பட்டுள்ளதாகவே கொள்ள வேண்டும். இது, வரலாற்று ரீதியான, ஒரு பெண் உரிமைப் பதிவாகவே கருதப்படவேண்டும்.

காதல் நிலையில், முதன் முதல், அழகிய பெண்ணைக் கண்ட ஆண்மகன், இவள் யாராக இருப்பாள் என்று, பலவாறு சந்தேகப்பட்டுப் பின் அறிவால் தெளிவடைவான். தொல்காப்பியம் 'ஐயக்கிளவி ஆடூஉவுக்குரித்தே' எனச் சந்தேகப்படும் உரிமை பெண்ணுக்கு இல்லை என்று தடை விதித்தது. காரணம், அவள் ஐயப்பட்டால், அறிவு அதிகம் இல்லாதவள் பெண் என்பதால், உள்ளத்தில் அச்சம் எழுமே அல்லாது, காதல் பிறவாது என்று உரைகாரர்கள் விளக்கம் வேறு அளித்தனர்.

புத்தாண்டு
மற்றும்
பொங்கல் வாழ்த்துகள்

சென்ற காலத்தின் பழுதிலாத்திறமும்
இனி எதிர்காலத்தின் சிறப்பும்
இன்று எழுந்தருளப் பெற்ற பேறிதனால்
எற்றைக்கும் திருவருளுடையேம்.

- பெரியபுராணம்

2004 ஆம் புத்தாண்டு மற்றும் பொங்கல் திருநாளில் திருக்கோயில் வாசகர்கள் எல்லா வளங்களும் பெற்றுப் பெருவாழ்வு வாழ இறைவனை இறைஞ்சுகிறேன்.

ஜி. இராமகிருஷ்ணன், இ.ஆ.ப.,
ஆணையாளர்
இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை
சென்னை - 600 034.

முன்னே தோன்றும் இவர் முருகனோ, மன்மதனோ என்று திருவாரூரில், சுந்தரரை முதன்முதல் கண்டு, பரவை நாச்சியார், ஐயம் கொண்டு தெளிந்தார் என்று, இலக்கண மரபை உடைத்துப் பெண்மையை அறிவு நிரம்பியதாகப் பெரியபுராணம் உயர்த்திப் பிடிக்கிறது. இது சைவம் பெண்மைக்குத் தந்த உரிமைக் கொடை.

ஆடவர்களும், பெண்மைக்குப் பெருமை சேர்க்குமாறு வாழ்ந்தனர் என்பதும் அங்கே சித்திரிக்கப் பட்டுள்ளது.

வீட்டுக்கு உரிய, திருவெண்காட்டு நங்கையும், சந்தனத்தாதியும் வருக என்று அழைத்தபோது, சிவனடியாராக வந்த வடபுலத்துக் கபாலி, பெண்கள் ஆடவர்கள் இல்லாது, தனித்து இருக்கும் இல்லத்துக்குள் ஆண் ஒருவன் வருவது பண்பு அல்ல என்று உரைத்தார் என்ற சேக்கிழாரின் பதிவு, அற்புதம் மிக்க, நீள நினைந்து மகிழத்தக்கது.

கணவர் மறைவுக்குக் காரணமானவர் இவர் என்று தெரிந்தும், வீடு தேடி வந்தவரை, பகை மறந்து வரவேற்பது பண்பாடு என்று கருதி, வரவேற்ற ஒரு மாதரசி கலிக்காம நாயனார் மனைவி என்பது மேலும் ஓர் அரிய பதிவு.

மயிலை, கபாலீச்சரத்தில் தாம் உயிர்ப்பித்துத் தந்த பூம்பாவையை மணந்து கொள்ளுமாறு, தந்தை சிவநேசர் ஞானசம்பந்தரை வேண்டுகிறார். ஒரு பெண்ணுக்கு உயிர் தந்த நான், தந்தையாதல் கூடுமே தவிர, கணவனாதல் கூடுமோ என்று உரைத்த ஞான சம்பந்தர் பதில் உரையில், பெண்மைச்சிறப்பெல்லாம், ஆடவர் பண்பாட்டில்தான் ஒளிபூக்கும் என்பது நிறுவப் பட்டுள்ளது.

என் இரு பெண்களையும் மணந்துகொள்ள வேண்டும் என்று கோட்புலியார் விண்ணப்பித்த போது, அவர்கள் இருவரையும் தம் பெண்மக்களாக ஏற்றுத் தேவாரத்துள் பதிவு செய்கிறார் சுந்தரர்.

கடவுளாக மட்டும் - பெண்ணைக் கோயில் களில் கும்பிட்டுக் கொண்டிருக்கும் நம்மவருக்கு, அத்தெய்வம், மனைவி வடிவில், உன் இல்லத்திலேயே இருக்கிறது என்று நிறுவிய சேக்கிழார், நம் சிந்தையில் நிறைகிறார்.

★★★



மதுரை அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோயிலில் 26.12.2003 அன்று கருணை இல்லக் கட்டிடத் திறப்பு விழா மிகச் சிறப்பாக நடைபெற்றது. மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் டாக்டர் கா. காளிமுத்து அவர்கள் கருணை இல்லத் கட்டிடத் திறந்து வைத்தார்கள். மாண்புமிகு இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை அமைச்சர் திருமிகு பி.சி. இராமசாமி அவர்கள், அறநிலையத்துறையின் அரசுச் செயலாளர் திருமிகு பு.ஏ. இராமையா இ.ஆ.ப. அவர்கள், இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை ஆணையாளர் திருமிகு ஜி. இராமகிருஷ்ணன் இ.ஆ.ப. அவர்கள் இவ்விழாவில் பங்கேற்றுச் சிறப்பித்தார்கள். திருக்கோயில் இணை ஆணையாளர் / செயல் அலுவலர் திருமிகு பா. பாஸ்கரன் பி.எஸ்.சி., பி.எல் அவர்கள் விழா ஏற்பாடுகளைச் சிறப்புறச் செய்து இருந்தார்கள்.

பதிவு எண். TN / PMG (CCR) / 707 / 03-05 / WPP No. 451



மதுரை அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோயிலில் 26.12.2003 அன்று கருணை இல்லக் கட்டிடத் திறப்பு விழா மிகச் சிறப்பாக நடைபெற்றது. மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் டாக்டர் கா. காளிமுத்து அவர்கள் கருணை இல்லத் கட்டிடத் திறந்து வைத்தார்கள். மாண்புமிகு இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை அமைச்சர் திருமிகு பி.சி. இராமசாமி அவர்கள், அறநிலையத்துறையின் அரசுச் செயலாளர் திருமிகு பு.ஏ. இராமையா இ.ஆ.ப. அவர்கள், இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை ஆணையாளர் திருமிகு ஜி. இராமகிருஷ்ணன் இ.ஆ.ப. அவர்கள் இவ்விழாவில் பங்கேற்றுச் சிறப்பித்தார்கள். திருக்கோயில் இணை ஆணையாளர் / செயல் அலுவலர் திருமிகு பா. பாஸ்கரன் பி.எஸ்.சி., பி.எல் அவர்கள் விழா ஏற்பாடுகளைச் சிறப்புறச் செய்து இருந்தார்கள்.

வெளியிடுபவர்	:	ஆணையர், தமிழ்நாடு அரசு இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை, சென்னை - 600 034.
ஆசிரியர்	:	கவிஞர் டாக்டர் த: அமிர்தலிங்கம், எம்.ஏ.பி.எச்.டி.,
அச்சிட்டோர்	:	பாவை பிரிண்டர்ஸ் (பி) லிட்., 142, ஜானி ஜான் கான் சாலை, சென்னை - 600 014.